# அபூர்வ கிளி



உலகம் முழுதும் விற்பனைக்காக 6 லட்சம் கிளிகள் பிடிக்கப்படுகின்றன. கிளி வகைகளில் 'ககாபூ' என்ற ரகம் அபூர்வமானது. இதில் மட்டும் 40 வகைகள் உண்டு. இந்தக் கிளிகள் நியூசிலாந்தில் காணப்படுகின்றன.

## துளசி நல்லது

ரத்தக்கொதிப்பு உள்ளவர்கள் துளசியை மென்று தின்று வருதல் நல்லது. சளி, இருமலால் அவதிப்படுபவர்கள் துளசியுடன் மிளகு சேர்த்து சாப்பிடலாம். தேள்கடிக்கும் துளசிச்சாறு மிகச்சிறந்த நிவாரணி.

## கொடிய பாம்பு

ஆப்பிரிக்கக் காடுகளில், 'ஆங்கலாமன்' என்ற வகைப் பாம்புகள் காணப்படுகின்றன. இவை கடுமையான விஷம் கொண்டவை. இதன் நீளம் 12 மீட்டர், எடை 230 கிலோ வரை இருக்கும். 30 ஆண்டுகள் உயிர்வாழும்.

## துரியோதனன் கோவில்

மராட்டிய மாநிலம் ஆமது நகர் மாவட்டத்தில் உள்ள துர்காம் கிராமத்தில் துரியோதனனுக்கு கோவில் உள்ளது. இது, 500 ஆண்டுகள் பழமையானது. இாலய பழங்குடி மக்கள், துரியோதனனைக் கடவுளாக வழிபடுகின்றனர்.

## மறைந்து மலர்ந்த நாடு

1771-ல் ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக ஐரோப்பாவின் பெரிய நாடாக போலந்து இருந்தது. அடுத்த 25 ஆண்டுகளில் அந்த நாடே இல்லாமல் போய்விட்டது. முதல் உலகப் போர் முடிவில் 1918-ல் போலந்து மீண்டும் சுதந்திரமாக ஐரோப்பாவில் இடம் பெற்றது.

– எஸ்.விஜயலட்சுமி, ஆதம்பாக்கம்.





ராஜேஷ்குமார்

# சர்ப்ப வியூகம்

1

"ஜெயா..."

'டிரஸ்ஸிங் டேபிள்' முன்பாய் நின்று இரண்டாம் முறையாக 'பவுடர் கோட்டிங்' கொடுத்துக்கொண்டிருந்த ஜெயா, கணவன்

அரி கூப்பிட– திரும்பிப் பார்க்காமலே "ம்" என்றாள்.

"உன்னோட தம்பி நல்லா தூங்கிட்டிருக்கான். அவனை அப்படியே தூங்க விட்டுட்டு நாம மட்டும் 'போட் அவுசு'க்குப் போயிட்டு வந்துடலாமா...?"

"என்ன சொன்னீங்க... என்னோட தம்பி வருணை விட்டுட்டுப் போறதா...?"

"ஆமா..."

"இந்த ஊட்டிக்கு அவன் நம்ம கூட வந்ததே 'போட் அவுசு'க்காகத்தான்..."

"இது ரொம்பவும் கொடுமை ஜெயா..."

"எது...?"

"ஊட்டிக்கு வந்து நாலைஞ்சு நாள் ஜாலியா இருக்கலாம்னு பார்த்தா, உன்னோட தம்பியும் வர்றேன்னு ஒட்டிக்கிட்டது. அவனை ஏதாவது ஒரு காரணம் சொல்லி ஊர்லேயே 'கட்' பண்ணி விட்டுட்டு வந்திருக்கணும்..."

"பாவங்க... ஒரு சின்னப் பையனோட ஆசையை 'மளுக்'குன்னு முறிச்சுட்டு வர்றது ரொம்பத் தப்பு..."

"அவனா சின்னப் பையன்...?"

"பின்னே... வயசு எட்டுதானே...?"

"வயசு என்னமோ எட்டுதான். ஆனா, அவன் பேசற பேச்சு இருக்கே...! அறுபது வயசு கிழவன் மாதிரி பேசுவான்..."

"எங்க பரம்பரை அப்படி..."

"பெரிசா பீத்திக்காதே. இப்ப அவனை என்ன பண்ணலாம்? தூங்கிட்டு இருக்கிறவனை இப்படியே அறைக்குள்ளே போட்டு பூட்டிட்டுப் போயிடலாமா... இல்லை, எழுப்பிக் கூட்டிட்டுப் போயிடலாமா...?"

"கூட்டிட்டுப் போயிடலாங்க..."

"சரி... அவனை எழுப்பு..."

ஜெயா வேகவேகமாய்ப் போய் கம்பளிப் போர்வைக்குள்



படுத்திருந்த தன் தம்பியை உசுப்பினாள்.

"டேய்... வருண்..."

"........."

கம்பளியை உருவினாள் ஜெயா.

"டேய் வருண்...! எந்திரி... நானும், அத்தானும் 'போட் அவுசு'க்கு கிளம்பிட்டிருக்கோம்..."

வருண் எழுந்து உட்கார்ந்தான். முகத்தைப் பெரிய மனுஷத் தோரணையில் வைத்துக்கொண்டு சொன்னான்.

"அக்கா...! நான் 'போட் அவுசு'க்கு வரலை. நீயும், அத்தானும் போய்ட்டு வந்துடுங்க..."

"நீ..."

"நான் அறையிலேயே இருந்துக்கறேன்..."

"ஏன்டா...?"

வருண் இரண்டு கைகளாலும் தன் கன்னங்களைத் தாங்கிக்கொண்டான்.

பார்வையை எங்கோ வைத்தபடி சொன்னான்.

"எனக்கு அறையில இருக்கத்தான் பிடிக்குது."

"என்னது... அறையில இருக்கத்தான் பிடிக்குதா?"

"ஆமா..."

"ஏன்டா...! ஊர்ல இருக்கும்போது ஊட்டிக்குப் போகணும் போகணும்னு பாடாய்படுத்தினியே? ஊட்டிக்கு வந்ததுமே ஏன் இப்படி அழிச்சாட்டியம் பண்ணுறே? எந்திரிச்சு துணி மாத்திக்கோ. 'போட் அவுசு'க்குப் போகலாம்."

"நான் வரலை..."

"என்னங்க... இவன் இப்படி அடம் பிடிக்கிறான்? இவனை அறையில தனியா விட்டுட்டு நாம மட்டும் எப்படிப் போறது...?"

அரி இப்போது வருணிடம் குனிந்தான்.

"டேய் வருண்...! உன்னோட பெரிய மனுஷத்தனத்தை

எல்லாம் மூட்டைக் கட்டி ஒரு ஓரமா வெச்சுட்டுக் கிளம்பு..."

"ஸாரி... அத்தான்! எனக்கு வெளியே வரப் பிடிக்கலை. நீங்களும், அக்காவும் போய்ட்டு வாங்க. நான் அறை உள் பக்கமா தாழ் போட்டுக்கிட்டு, டி.வி.யில கார்ட்டூன் பார்த்துட்டிருக்கேன்."

ஜெயா தன் இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு தம்பியை ஒரு உஷ்ணப் பார்வை பார்த்தாள்.

"உதை விழும். மரியாதையா எங்கக்கூட கிளம்பி வரப் போறியா இல்லையா...?"

ஜெயாவையே பார்த்தான் வருண்.

"என்னடா பார்க்கறே... போய் மொதல்ல மூஞ்சியைக் கழுவிட்டு வா..."

வருண் தரையை உதைத்துவிட்டு, அறையின் மூலையில் இருந்த குளியலறைக்குள் போனான்.

அரியைப் பார்த்தாள் ஜெயா.

"இவனுக்கு என்னங்க ஆச்சு...?"

"என்னைக் கேட்டா...? உன்னோட குடும்பமே லூஸ். பின்னே எப்படி இருப்பாங்க...?"

"இதோ பாருங்க! என் குடும்பத்தை அநாவசியமா இழுக்காதீங்க. எனக்குக் கெட்ட கோபம் வரும்."

"உள்ளதைச் சொன்னா கோபம் வரத்தான் செய்யும்..."

"சரி... எங்கது லூசு குடும்பம்னு தெரிஞ்சும் என்னை ஏன் கட்டிக்கிட்டீங்க...?"

"கட்டிக்கிட்ட பிறகுதானே லூசு குடும்பம்னு தெரிஞ்சது..."

ஜெயா கோபத்தில் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, டீபாயின் மேல் இருந்த பித்தளை 'பிளவர் வாஷ்' ஒன்றை எடுத்துக்கொண்டு ஓங்கினாள்.

அரி ஒதுங்கியபடி சிரித்தான்.

"அடிச்சுடாதே...! பிளவர் வாஷுக்கு ஏதாவது ஒண்ணு ஆயிட்டா, ஓட்டல் 'பில்'லில் தொகை ஏறிடும்."

தொலைபேசி கூப்பிட்டது.



போய் ரிஸீவரை எடுத்தான்.

"அலோ..."

"ஸார்... இது ஓட்டல் ரிசப்ஷன்..."

"சொல்லுங்க..."

"உங்களைப் பார்க்கிறதுக்காக உங்க நண்பர் மிஸ்டர் கிறிஸ்டோபர் வந்து காத்திட்டிருக்கார். உங்க அறைக்கு அனுப்பி வைக்கலாமா ஸார்...?"

"பிளீஸ்."

அரி ரிஸீவரை வைத்த இரண்டாவது நிமிடம்-

இருபத்தேழு வயது கிறிஸ்டோபர் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தான்.

"வாடா தடியா..."

"ஸாரிடா அரி ..."

"எதுக்கு ஸாரி...?"

"என்னைக் கேட்டு வீட்டுக்கு நாலைஞ்சு தடவை போன் பண்ணிட்டியாம். நான் ரெண்டு நாளா வெளியூர் போயிட்டேன். கோயமுத்தூர்ல ஒரு சட்டம்-ஒழுங்கு பிரச்சினை. விசாரணைக்காகப் போய்ட்டு அரை மணி நேரத்துக்கு முன்னாடிதான் திரும்பி வந்தேன். வந்த உடனே வீட்டுல என்னோட மனைவி, நீ போன் பண்ணினதைப் பத்தி சொன்னா. பைக்கை எடுத்துக்கிட்டு ஓடி வர்றேன்..."

அரி தன் மனைவியிடம் திரும்பினான்.

"ஜெயா...! இவர் கிறிஸ்டோபர். போலீஸ் துறை. கியூ பிராஞ்சில் இன்ஸ்பெக்டர். என் காலேஜ் மேட். ஊட்டிக்கு வந்தா அவசியம் எனக்கு போன் பண்ணணும்னு சொல்லிட்டே இருப்பான். வந்ததில் இருந்து போன் பண்ணிப் பார்த்தேன். ஆளே கிடைக்கலை. இப்ப வந்திருக்கான்..."

கிறிஸ்டோபர் கைகளைக் குவித்தான்.

"வணக்கம் சிஸ்டர்..."

"வணக்கம்..."

அரி, கிறிஸ்டோபரின் தோளை அழுத்தினான்.

"உட்காருடா..."

கிறிஸ்டோபர் உட்கார்ந்தான்.

"வேலை எல்லாம் எப்படி இருக்கு...?"

"ம்... சட்டம்- ஒழுங்கு அப்பப்ப கொஞ்சம் இடையூறு ஆனாலும் எல்லாமே கட்டுப்பாட்டுல இருக்கு."

"தமிழ்நாட்டுல இனி குண்டு வெடிக்குமா?"

"தமிழ்நாட்டுல மட்டுமில்லை; இந்தியாவின் எந்தப் பகுதியிலும் குண்டு வெடிக்காது. அந்த அளவுக்கு எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கு. இனிமே தீபாவளி நேரத்துல சிவகாசி பட்டாசு சத்தம் மட்டும்தான் கேட்கும். பை... த...பை! ரெண்டு பேரும் வெளியே எங்கேயோ கிளம்பிட்டீங்க போலிருக்கு?"

"ஆமா...! 'போட் அவுஸ்'க்கு! நேத்து பொட்டானிக்கல் கார்டன் போய் இருந்தோம்..."

குளியலறை கதவைத் திறந்துகொண்டு வருண் வெளிப்பட்டான்.

கண்களில் இன்னமும் மத்தியான தூக்கக் கலக்கம்.

கிறிஸ்டோபர் கேட்டான்.

"பையன் யாரு...?"

"என் மனைவி ஜெயாவோட தம்பி. பேரு வருண்."

வருணின் தோள்பட்டையைப் பற்றினான் கிறிஸ்டோபர்.

"எந்த வகுப்பு படிக்கிறே...?"

"பிப்த்..."

"எந்த ஸ்கூல்...?"

"விவேகானந்தா மெட்ரிகுலேஷன்."

"என்ன... பையன் 'டல்'லடிக்கிறான்..."

"இப்பத்தான் இப்படி இருக்கான். மத்தியானம் சாப்பிடும்போதுகூட கடி 'ஜோக்'கெல்லாம் சொல்லிட்டு, 'ஜாலி



மூடு'ல இருந்தான். இப்ப 'போட் அவுஸ்'க்கு கூப்பிட்டா- 'நான் வரலை. அறையிலேயே இருக்கேன். நீங்க ரெண்டு பேர் மாத்திரம் போயிட்டு வாங்க'ன்னு சொல்றான்."

"அப்படியா...?"- என்ற கிறிஸ்டோபர், வருணைப் பக்கத்தில் இழுத்து வைத்துக்கொண்டு கேட்டான்.

"படகுல போக உனக்குப் பிடிக்காதா?"

"பிடிக்கும்..."

"பின்னே ஏன் போகமாட்டேன்னு சொல்றே?"

"எனக்கு வெளியே போகப் பிடிக்கலை."

"ஏன்...?"

"தெரியலை. இந்த ஊட்டியைவிட்டு உடனே கிளம்பிப் போயிடணும் போலிருக்கு..."

கிறிஸ்டோபர் மெல்ல ஜெயாவை ஏறிட்டான்.

"என்ன சிஸ்டர்! உங்க தம்பி பேச்சு, ஒரு சின்னப் பையன் பேசற மாதிரி இல்லாமே பெரிய மனுஷத் தோரணையில் இருக்கு."

ஜெயா சிரித்தாள்.

"வருண் எப்பவும் இப்படித்தான் பேசுவான். அவனுக்கு ஒரு விஷயம் பிடிக்கலைன்னா திரும்பத் திரும்ப சொல்லிட்டே இருப்பான். இன்னிக்கு ஒரே பிடிவாதம் பிடிக்கிறான். 'நான் அறையிலயே இருந்துக்கிறேன்... நீங்க 'போட் அவுஸ்'க்கு போயிட்டு வாங்க'ன்னு சொல்றான்... இவனை எப்படி அறையில விட்டுட்டு போறது...?"

கிறிஸ்டோபர், வருணின் அடர்த்தியான தலைமுடியை மெள்ளக் கோதி விட்டான்.

"வருண்...! அவங்க வேணும்னா 'போட் அவுஸ்'க்கு போகட்டும். நீ என்னோடு வீட்டுக்கு வர்றியா...? அங்கே நாய், பூனை, பறவைகள் எல்லாமே இருக்கு. நீ விளையாடிகிட்டே இருக்கலாம்..."

"........."

"என்ன வர்றியா...?"

"ம்..."

"கிறிஸ்டோபர்! இவன் சரியான ரெட்டைவால். உன்னால சமாளிக்க முடியாது..."

"கவலையேபடாதே அரி! இந்தக் காலத்துல எல்லாக் குழந்தைகளுமே துறுதுறுன்னுதான் இருக்காங்க. நான் பார்த்துக்கிறேன். நீங்க ரெண்டு பேரும் 'போட் அவுசு'க்குப் போயிட்டு அப்படியே ராத்திரி விருந்து சாப்பிட என் வீட்டுக்கு வந்துடுங்க. சாப்பிட்டுட்டு வருணைக் கூட்டிக்கிட்டு வந்துடலாம்..."

"உனக்கு ஏன்டா சிரமம்...?"

"இதுல சிரமப்பட ஒண்ணுமே இல்லை. நான் வருணைக் கூட்டிக்கிட்டு கிளம்பறேன். நீங்க ரெண்டு பேரும் 'போட் அவுசு'க்குப் போயிட்டு அப்படியே என் வீட்டுக்கு வந்துடுங்க..."

ஜெயா, வருணைக் கேட்டாள்.

"ஏன்டா! அங்கிள் வீட்டுக்குப் போறியா?"

"ம்..."

"குறும்பு பண்ணாமே சமத்தா இருக்கணும்."

"ம்..."

கிறிஸ்டோபர், வருணைக் கூட்டிக்கொண்டு வெளியே வந்தான். லிப்டில் இறங்கும்போது கேட்டான்.

"வருண்...! நீ இதுக்கு முந்தி ஊட்டிக்கு வந்திருக்கிறியா?"

"இல்ல அங்கிள்...! இதான் முதல் தடவை..."

"எல்லாருக்கும் பிடிச்ச ஊட்டி, உனக்கு மட்டும் ஏன் பிடிக்கலை...?"

"என்னமோ தெரியலை..."

'பைக்'குக்கு வந்தார்கள்.

'பைக்' உதைபட்டபோது வருண் கேட்டான்.

"அங்கிள்! உங்க வீடு எங்கே இருக்கு...?"

"தொட்டபெட்டா போற வழியில..."



"ரொம்ப தூரமா...?"

"கொஞ்ச தூரம்தான்..."

வருண் பில்லியனில் தொற்றிக்கொள்ள– அந்த மத்தியான மூன்று மணி குளிர்க்காற்றை வெட்டிக்கொண்டு 'பைக்' கிளம்பியது.

"வேகமா போனா நீ பயப்படுவியா?"

"ஊ... ஹு..ம்."

"அப்ப வேகமா போகட்டுமா...?"

"ம்..."

கிறிஸ்டோபர் வேகத்தை அறுபதில் இருந்து எழுபதுக்குக் கொண்டு போக– 'பைக்' ஒரு குத்திட்டி மாதிரி விரைந்தது. செர்ரி கிராஸ் ரோட்டைத் தாண்டி, யூகலிப்டஸ் மரங்களைப் பின்னுக்கு விரட்டியது.

"வருண்! ஐஸ்கிரீம் சாப்பிடறியா?"

"வேண்டாம்..."

"கேக்?"

"ஊ... ஹு..ம்."

"ஊட்டிக்கு வந்தா டல்லா இருக்கக் கூடாது. சந்தோஷமா இருக்கணும்..."

"ம்..."

"உனக்கு நிறைய கடி 'ஜோக்ஸ்' தெரியுமாமே! ஒண்ணை எடுத்து விடேன்..."

"உங்க வீட்டுக்குப் போனதும் சொல்றேன் அங்கிள்..."

"சரி... இப்ப நான் ஒரு கடி 'ஜோக்' சொல்லட்டுமா?"

"சொல்லுங்க..."

"ஒரு யானையும், எறும்பும் கண்ணாமூச்சு விளையாட்டு விளையாடிட்டு இருந்ததாம். யானை திரும்பி நின்று கண்ணை மூடிக்கிட்டதும் எறும்பு வேகவேகமாய் போய் பக்கத்துல இருந்த ஒரு கோயிலுக்குள்ளே ஒளிஞ்சிகிச்சாம். யானை ரொம்பவும்

அலையாம, கோயிலுக்குள்ளே போன எறும்பை சுலபமா கண்டு பிடிச்சுதாம். அது எப்படிக் கண்டுபிடிச்சிருக்கும்னு சொல்ல முடியுமா?"

வருண் யோசித்துவிட்டுத் தலையாட்டினான்.

"முடியும்."

"எப்படி? சொல்லு... பார்க்கலாம்...!"

"அந்த எறும்பு, கோயிலுக்குள்ளே ஒளிஞ்சுக்கப் போறதுக்கு முந்தி தன்னோட செருப்பைக் கோயில் வாசல்ல விட்டுட்டுப் போயிருந்தது. அதை வெச்சு யானை கண்டு பிடிச்சுடுச்சு."

கிறிஸ்டோபர் சிரித்தான்.

"உனக்கு இந்தக் கடி 'ஜோக்' முன்னாடியே தெரியும் போலிருக்கே...?"

"தெரியும் அங்கிள்..."

'பைக்' இப்போது தொட்டபெட்டா போகும் சாலையில் திரும்பி விரைந்தது.

சாலையின் இரண்டுபக்கமும் சைப்ரஸ் மரங்கள் ஊசி இலைகளோடு அடித்த குளிர்காற்றுக்கு அசைந்துகொண்டிருந்தது.

"உங்க வீடு பெரிய பங்களாவா அங்கிள்?"

"இல்ல... சின்ன வீடுதான்.'

"நாய் இருக்குன்னு சொன்னீங்களே அங்கிள்... என்ன நாய்?"

"பாமரேனியன். நாய்ன்னா உனக்குப் பிடிக்குமா?"

"ரொம்ப..."

"உனக்கு வேற என்னல்லாம் பிடிக்கும்?"

"முயல்..."

ஒரு கொண்டை ஊசி வளைவில் 'பைக்' திரும்பியது யூகலிப்டஸ் மரங்கள் கோஷ்டி கோஷ்டியாய வந்தன.

வருண் கேட்டான்.

"உங்க வீட்டுக்கு இன்னும் எவ்வளவு தூரம் போகணும் அங்கிள்...?"



"இதோ வந்தாச்சு. இங்கிருந்து இனி ஒரு கிலோ மீட்டர் தூரம்தான்..."

"அங்கிள்..."

"என்ன...?"

"கொஞ்சம் ரோட்டோரமா வண்டியை நிறுத்துறீங்களா?"

"எதுக்கு...?"

"நம்பர் ஒன் போகணும்."

"வீட்டுக்குப் போய் போய்க்கலாமே?"

"ரொம்ப அவசரம் அங்கிள்."

கிறிஸ்டோபர் சாலையோரமாய் வண்டியை நிறுத்தினான்.

"சரி... போயிட்டு வா..."

வருண் 'பைக்'கில் இருந்து குதித்து சாலையோர புல்தரை மேலேறி ஒரு மரத்துக்குப் பின்னால் போனான்.

கிறிஸ்டோபர் சிரித்தான்.

"டேய் பெரிய மனுஷா! ரொம்ப தூரம் போயிடாதே..."

மரத்துக்குப் பின்னால் வருண் மறைந்ததும், கிறிஸ்டோபர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான்.

சிகரெட் புகையாய் மாறி உடம்பைக் கரைத்துக்கொள்ள - விநாடிகள் வீழ்ந்துகொண்டிருந்தன.

ஒரு நிமிஷம்...

இரண்டு நிமிஷம்...

மூன்று... நான்கு...

ஐந்து...

மரத்துக்குப் பின்னாடி போன வருண் திரும்பி வரவில்லை.

கிறிஸ்டோபர் ஆச்சர்யப்பட்டுக்கொண்டே குரல் கொடுத்தான்.

"வருண்..."

"........."

"வருண்..."

குரல் கொடுத்தபடியே போய் மரத்துக்குப் பின்னால் எட்டிப் பார்த்தான் கிறிஸ்டோபர்.

வருண் இல்லை.

சுற்றும் முற்றும் பார்த்தான்.

வருண் எந்தத் திசையிலும் இல்லை.

## 2

"**து**ர்கா."

அப்பாவின் குரல் ஹாலில் இருந்து கேட்க- மாடியில் இருந்து துர்கா எட்டிப் பார்த்தாள். இருபது வயது ரோஜா.

"என்னப்பா...?"

"மாடியில என்னம்மா பண்ணுறே?"

"லவ் பேர்ட்ஸுக்குத் தீனி போட்டுக்கிட்டு இருக்கேன். ஏம்ப்பா...?"

"கொஞ்சம் கீழே இறங்கி வாம்மா."

"எதுக்குப்பா...?"

"கேள்வி கேட்காமே வாம்மா... சொல்றேன்."

அந்த அழகான துர்கா மிக அழகாய் சிணுங்கிக்கொண்டே மாடிப் படிகளில் ஒவ்வொன்றாய் உதைத்துக்கொண்டே கீழே இறங்கி வந்தாள்.

"என்னப்பா..."

"வாசல் வரைக்கும் போயிட்டு எதிர்ல வாம்மா..."

அப்பா உமாபதி சொல்ல- துர்கா மறுபடியும் சிணுங்கினாள்.

"எதுக்கு...?"

"ஒரு நல்ல சகுனத்துக்காகத்தான். வெளியே கிளம்பும்போது



நீ எதிர்ல வந்தாலே போதும். போற காரியம் வெற்றிதான்."

துர்கா பக்கத்தில் வந்து உமாபதியின் தோளில் தொங்கிக்கொண்டிருந்த பட்டு அங்கவஸ்திரத்தை சரிசெய்தபடியே மெல்லிய குரலிலில் கேட்டாள்.

"இவ்வளவு காலங்கார்த்தால எந்திரிச்சு எங்கேப்பா போறீங்க...?"

உமாபதி சிரித்தார்.

"அதான் சொன்னேனேம்மா... ஒரு நல்ல காரியம்னு."

"எஸ்டேட்டை விலை பேசி முடிச்சு, இன்னிக்கு 'அக்ரிமென்ட்' போடப் போறீங்களா?"

"அதில்லேம்மா..."

"பின்னே...?"

துர்கா விழிகளை விரித்துக்கொண்டு கேட்டாள்.

உமாபதி மறுபடியும் சிரித்தார்.

"என்னம்மா நீ... ஒரு நல்ல காரியம்ன்னா எஸ்டேட் வாங்கறது மட்டும்தானா...?"

"அப்புறம்...?"

"உனக்குக் கல்யாணத்தைப் பேசி முடிக்கத்தான் கிளம்பிப் போயிட்டிருக்கேன்மா..."

"என்னது... கல்யாணமா?"

"ம்..."

"உமாபதியின் தோளில் இருந்த அங்கவஸ்திரத்தை துர்கா கோபத்துடன் உருவிக்கொண்டாள்.

"இன்னிக்கு நீங்க வெளியே கிளம்பிப் போக முடியாது..."

"என்னம்மா... இது?"

"நான கல்யாணம் வேணும்னு உங்கி சொன்னேனா...?"

"நீ சொல்லணுமா என்ன...? காலா காலத்துல வேண்டியது... நடந்துதானே ஆகணும்..."

"சரி... மாப்பிள்ளை யாரு...?"

"எஸ்டேட் அதிபர் பகிரதனின் பையன் சதீஷ்குமார்."

"ரத்து..."

"என்னம்மா இது! பையனைப் பார்க்காமலே ரத்துன்னு சொல்றே...! பையன் ராஜாவாட்டம் இருப்பான்."

"என்னது! ராஜாவாட்டம் இருப்பானா...?"

"ஆமாம்மா..."

"அப்படின்னா ராஜசபைக்கு தினசரி நானும் பத்து கிலோ எடையில கிரீடம் வெச்சிட்டு போகணும்னு சொல்லுங்க."

"ஏம்மா இப்படி பேசறே...?"

"அப்பா...! நீங்க உண்மையிலே நல்லபடி எனக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைக்க ஆசைப்படுறீங்களா?"

"ஆமாம்மா..."

"அப்படின்னா..."

தயக்கமாய்க் குரலை இழுத்தாள் துர்கா.

உமாபதி வியப்பாய் பார்த்தார்.

"சொல்லும்மா..."

"ஒரு பத்து நொடி கண்ணை மூடிக்குங்கப்பா..."

"எதுக்கு...?"

"மூடிக்குங்க..."

"சரி..."

உமாபதி கண்களை மூடிக்கொள்ள–

துர்கா தன் மார்புப் பகுதிக்குக் கையைக் கொண்டுபோய் ஜாக்கெட்டின் இடைவெளியில் இரண்டு விரல்களை மட்டும் நுழைத்து– ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை எடுத்து உமாபதியின் முகத்துக்கு நேராக வைத்தாள்.

"கண்ணைத் திறங்கப்பா..."

திறந்தார்.

புகைப்படம் பார்வைக்குக் கிடைக்க– நெற்றியில்



வியப்புக்குறிகளை நட்டுக்கொண்டே கேட்டார்.

"யாரம்மா இந்தப் பையன்...?"

"பையன் இல்லேப்பா... உங்க மாப்பிள்ளை."

"நீ என்னம்மா சொல்றே...?"

"அப்பா...! சினிமாவில் வர்ற அப்பாக்களை மாதிரி நீங்க காதலுக்கு எதிரா கோஷம் போட மாட்டீங்கங்கிற ஒரு நம்பிக்கையில் இந்தப் படத்தில் இருக்கிறவரை ஆறு மாசமா காதலிச்சுட்டு வர்றேன். இவர் பேர் வல்லப். நம்ம சாதிக்காரர்தான். சென்னையில ஒரு பெரிய தொழில் அதிபர். போன மலர் கண்காட்சிக்கு இவர் ஊட்டி வந்திருந்தபோது பொட்டானிக்கல் கார்டன்ல ஏதேச்சையா பார்த்துக்கிட்டோம்.

அதுக்கப்புறம் ஒரு 'கேக் ஷாப்'ல சந்திச்சோம். பார்வை பேச்சாய் மாறி– டெலிபோன் நம்பர்களைப் பரிமாறிக்கிட்டோம். இவர் சென்னையில தொழில் நடத்திக்கிட்டு இருந்தாலும் மாசத்துக்கு ஒரு தடவை இங்கே ஊட்டிக்கு வந்துடுவார். கூடலூர் மெயின் ரோட்ல அவருக்கு ஒரு 'கெஸ்ட் அவுஸ்' இருக்கு..."

உமாபதி தன் மகளை வைத்த கண் வாங்காமல் பார்த்தார்.

"என்னப்பா...! அப்படி பார்க்கறீங்க?"

"நீ இவ்வளவு வேகமா இருப்பேன்னு நான் நினைச்சுக்கூடப் பார்த்தது இல்லேம்மா..."

"சரி... என்னோட காதலுக்கு சிவப்புக் கொடியா... பச்சைக்கொடியா...?"

உமாபதி சிரித்தார்.

"பச்சைப்பசேல் கொடி..."

## 3

**போட்** அவுஸ்.

"அது [illegible]ான் ஐஸ் கிரிமை சாப்பிட்டுக்கொண்டு படகுக்காகக்

காத்திருந்த ஜெயாவும், அரியும்– பைக்கை நிறுத்திவிட்டு ஓடிவரும் கிறிஸ்டோபரை வியப்பு கலந்த பார்வை பார்த்தனர்.

"அரி ..."

"ஏன்டா இப்படி ஓடி வர்றே...?"

"வருண் இங்கே வந்தானா...?"

"என்னடா உளர்றே...? வருணை நீதானே உன் வீட்டுக்கு கூட்டிட்டுப் போனே...?"

"வாஸ்தவந்தான்! ஆனா... வழியில அவன் காணாம போயிட்டான்..."

ஜெயா பதறினாள்.

"என்னது... வருண் வழியிலே காணாமே போயிட்டானா, எப்படி...?"

"அவன், 'யூரின் பாஸ் பண்ணனும். வண்டியைக் கொஞ்சம் நிறுத்துங்க அங்கிள்'னு சொன்னான். நானும் வண்டியை ரோட்டோரமாய் நிறுத்தினேன். வருண் யூரின் பாஸ் பண்றதுக்காக ஒரு மரத்துக்குப் பின்னாடி போனான். நான் சிகரெட்டைப் பத்த வெச்சுகிட்டு 'வெயிட்' பண்ணினேன்.

ஒரு நிமிஷம், ரெண்டு நிமிஷம்னு நேரம் போயிட்டே இருந்தது. வருண் மரத்துக்குப் பின்னாடி இருந்து வரவேயில்லை. மரத்துக்குப் பின்னாடி போய்ப் பார்த்தேன். வருணைக் காணோம். நான் பதற்றப்பட்டு எல்லாப் பக்கமும் ஓடிப் போய் பார்த்தேன். அவன் பார்வைக்குக் கிடைக்கலை..."

ஜெயா இப்போது கண்களில் நீர் கோர்த்து பெரிய குரல் எடுத்து அழவே ஆரம்பித்துவிட்டாள்.

அரியின் தோளைப் பற்றி உலுக்கினாள்.

"அய்யய்யோ...! என்னங்க உங்க நண்பர் இப்படி வந்து சொல்றார்...?"

"ஜெயா! கொஞ்சம் பொறுமையா இரு...! வருண் எங்கேயும் போயிருக்க மாட்டான். இந்தப் பொது இடத்துல நீ அழுகையால



ஆர்ப்பாட்டம் பண்ணிடாதே..."

அரி, ஜெயாவின் தோளைத் தட்டி சமாதானப்படுத்திவிட்டு கிறிஸ்டோபரிடம் நிமிர்ந்தான்.

"வருணை எந்த இடத்துல காணாமே போனான்?"

"தொட்டபெட்டா ரோட்ல... யூகலிப்ட்ஸ் ஸ்கொட்ர் கிட்ட."

"நல்லா தேடிப் பார்த்தியா?"

"அரை மணி நேரமா தேடிப் பார்த்து அலையா அலைஞ்சு அலைஞ்சுட்டு– ஒருவேளை போட் அவுசுக்கு வந்திருப்பானோங்ற சந்தேகத்துல இங்கே ஓடோடி வர்றேன்."

அரி கவலையாய் நெற்றியைத் தேய்த்தான்.

"வருண் காலையில இருந்தே லேசா 'மூட் அவுட்' ஆன மாதிரி இருந்தான். அவனுக்குத் திடீர்னு என்னாச்சுன்னே தெரியலை."

"என்னங்க..."

அரியை உசுப்பினாள் ஜெயா. "நாம போலீசுக்குப் போய் தகவல் குடுத்துடலாம்."

"பொறு ஜெயா! உடனே போலீசுக்குப் போகக் கூடாது. மொதல்ல வருண் காணாமே போன இடத்துக்குப் போய்ப் பார்ப்போம். இந்த ஊட்டியில் இருக்கிற முக்கியமான நாலைஞ்சு இடங்கள்ல தேடிப் பார்த்துட்டு, அதுக்கப்புறமும் அவன் கிடைக்கலைன்னா போலீசுக்குப் போவோம்."

"சரி...! சீக்கிரம்... கிளம்புங்க..."

அரி சுற்றும் முற்றும் பார்த்து– சற்றுத் தொலைவில் ஒரு மர நிழலில் நின்றிருந்த காலி ஆட்டோவைக் கையசைத்துக் கூப்பிட்டான்.

"கிறிஸ்டோபர்! நீ அந்த இடத்துக்கு பைக்ல முன்னாடி போ... நாங்க ஆட்டோவில் உன்னை 'பாலோ' பண்ணுறோம்."

கிறிஸ்டோபர் கவலையாய் தலை அசைத்தான்.

"அது ...

# 4

ஜன்னலுக்கு வெளியே பார்வையைப் போட்டிருந்தா துர்கா.

சமீபத்தில் பெய்த மழையால் ஊட்டியின் பச்சை நி பட்டாடை இன்னமும் அடர்த்தியான பச்சை நிறத்தில் சாய போட்ட மாதிரி இருந்தது.

மலைச் சிகரங்களில் ஒட்டி இருந்த பஞ்சுத் துணுக் மேகங்கள், எந்தப் பக்கம் போகலாம் என்று யோசித்தப உட்கார்ந்திருந்தன.

துர்காவுக்கு அந்தக் காட்சிகள் பழக்கப்பட்டுவிட்ட ஒன் என்றாலும்கூட, அவற்றைச் சலிக்காமல் பார்த்துக்கொண் இருப்பதில் ஒரு சுகம்.

"துர்கா."

அறை வாசலில் குரல் கேட்டு மெள்ளத் திரும்பினாள்.

அப்பா உமாபதி.

துர்கா ஒரு துள்ளலோடு பக்கத்தில் வந்தாள்.

ஆர்வமாய் கேட்டாள். "என்னப்பா..."

அவர் ஒரு பெருமூச்சை வெளியிட்டபடி உட்கார்ந்தார்.

துர்கா முகம் மாறினாள்.

"ஏம்ப்பா... ஒரு மாதிரி 'டல்'லா இருக்கீங்க?"

உமாபதி சில விநாடிகள் பேசத் தயங்கிவிட்டு, பின் மெல்லி குரலில் பேச்சை ஆரம்பித்தார்.

"உன்னோட மாமாவும், சித்தப்பாவும் சென்னைக்கு போய் வல்லப் அப்பாவை பார்த்து பேசிட்டு வந்திருக்காங்க. பையனோட காதல் விவகாரம் அவருக்கு ஆரம்பத்துல கொஞ் சம் அதிர்ச்சியா இருந்ததாம். அப்புறம் போகப் போக சகஜ நிலைமைக்கு வந்துட்டாராம்."

"கல்யாணத்துக்கு சம்மதம் சொன்னாரா, இல்லையா



"வல்லப் தொழில் விஷயமா ஐதராபாத் வரைக்கும் போயிருக்காராம். வந்ததும் கேட்டுட்டு பதில் சொல்றதா சொல்லி இருக்கார்."

"அதாவது போன காரியம் பழம்...!"

"பழம்தான்... இருந்தாலும்..."

"என்னப்பா பேச்சை ஒரு மாதிரியா இழுக்கிறீங்க...?"

உமாபதி பதில் சொல்வதற்குள்–

அவருடைய தம்பி தயாவும், எப்போதோ காலமாகிவிட்ட அவருடைய மனைவியின் தம்பி சுதாகரும் உள்ளே வந்தார்கள்.

தயாவுக்கு ஐம்பது வயது இருக்கலாம். லேசாய் உமாபதியின் ஜாடை. பின் வழுக்கைத்தலை. நல்ல வெளுப்பில் வேட்டி– சட்டை அணிந்து, நெற்றிக்கு சந்தனம்– குங்குமம் கொடுத்திருந்தார்.

அவருக்குப் பக்கத்தில் நின்றிருந்த சுதாகருக்கு நாற்பது வயது. குள்ளமாய், குண்டாய் தொப்பை போட்டு தெரிந்தார். படிய வாரிய தலையில் ஆங்காங்கே நரை.

இரண்டு பேரும் துர்காவுக்கு இடது, வலமாய் வந்து நின்றார்கள்.

தயா சொன்னார்.

"அம்மா துர்கா...! சென்னைக்குப்போய் வல்லப்போட அப்பாவைப் பார்த்து பேசினோம். வல்லப் ஊரில் இல்லை. ஆனா, போட்டோவைப் பார்த்தோம். பையன் ஓ.கே. நம்ம தகுதிக்கு ஏத்த மாதிரியான இடம்தான். வெளியில நாலைஞ்சு இடத்துல விசாரிச்சபோதும் அவங்க குடும்பத்தைப் பத்தி உயர்வாயும், நல்ல விதமாகவும் சொன்னாங்க. எல்லாமே சரி. ஆனா... ஒரே ஒரு விஷயம் மட்டும்..."

"என்ன... சொல்லுங்க...??"

"அது... வந்து... வந்து..." தயா குரலை இழுக்க–

உமாபதி குறுக்கிட்டு தொடர்ந்தார்.

"அது ஒண்ணும் இல்லேம்மா... பையனோட ஜாதகத்தை

வாங்கிட்டு வந்து நம்ம குடும்ப ஜோசியர் மாதையாகிட்ட காட்டி இருக்காங்க. அவர் பார்த்துட்டு பையனோட ஜாதகம் அவ்வளவு சிலாக்கியமா இல்லேன்னு சொல்லிட்டார். அது உன்னோட சித்தப்பாவுக்கும், மாமாவுக்கும் பெரிய வருத்தம்

"என்னது...! ஜாதகம் சரியில்லையா?"

"ஆமாம்மா..."

"சரி இல்லைன்னா... எப்படி சரியில்லை...?"

"அதை எப்படிம்மா என்னோட வாயால சொல்றது?"

துர்கா முகம் சிவந்தாள்.

"அப்பா...! இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாதுன்னு நினை ஏதாவது 'டிராமா' பண்ணுறீங்களா...?"

"சேச்சே! என்னம்மா... இப்படியெல்லாம் மலிவா ஆரம்பிச்சுட்டே! நீ ஒரு பையனை விரும்பி இருக்கே. அந்த பையனையே உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கத்தான் எனக்கு ஆசை. ஒரு வகையில பார்த்தா உனக்கு மாப்பிள்ளை தேடு வேலையை எனக்கு மிச்சம் பண்ணிக் கொடுத்திருக்கே... நீ தேர் பண்ணி இருக்கிற மாப்பிள்ளை விஷயத்துல எல்லாமே ஓ.கே இந்த ஜாதக விவகாரம்தான் மனசுக்கு நெருடலா இருக்கு..."

துர்கா கோபமாய் கேட்டாள்.

"அவரோட ஜாதகத்துல அப்படி என்னதான் நெருடல்...?"

இப்போது தயா குறுக்கிட்டுச் சொன்னார்.

"அது வந்தும்மா... மாப்பிள்ளை பையனோட ஜாதகத்துல ஏதோ களத்திர தோஷம் இருக்காம்..."

"களத்திர தோஷமா... அப்படீன்னா...?"

மூன்று பேரும் பரஸ்பரம் தர்மசங்கடத்தோடு முகங்களை பார்த்துக்கொண்டார்கள்.

சுதாகர் மெல்ல பேச்சை ஆரம்பித்தான்.

"அதை எப்படி சொல்றதுன்னு..."

"பரவாயில்ல மாமா! சொல்லுங்க..."

"அந்தப் பையனுக்கு கல்யாணம்னு ஒண்ணு நடந்தா ரொம்ப



நாளைக்கு..."

"ரொம்ப நாளைக்கு...?"

"அவன் உயிரோடு இருக்க மாட்டானாம்..."

## 5

கிறிஸ்டோபர் 'பைக்'கை நிறுத்திவிட்டு சொன்னான்.

"வருண் காணாம போனது இந்த இடம்தான் அரி."

அரியும், ஜெயாவும் ஆட்டோவில் இருந்து கவலையான முகங்களோடு இறங்கி சுற்றும் முற்றும் பார்த்தார்கள்.

எல்லா திசைகளிலும் யூகலிப்டஸ் மரங்கள் நெருக்கியடித்து தெரிந்தன. மாலைச் சூரியன், மரங்களுக்கு பின்னால் சிக்கி இறங்கிக்கொண்டிருந்தான்.

"எந்த மரத்துக்குப் பின்னாடி வருண் போனான்?"

"அதோ... அந்த மரம்தான்."

ஜெயா சேலைத் தலைப்பால் வாயைப் பொத்தி அழுகையை அடக்கிக்கொண்டே அரியோடு நடந்து மரத்துக்கு பின் பக்கம் போய்ப் பார்த்தாள்.

மரத்துக்கு பின்பக்கம் ஒரு புல்வெளி பரப்பு, குற்றுச்செடிகளோடு தெரிந்தது.

அரி கூப்பிட்டான்.

"கிறிஸ்டோபர்..."

"ம்..."

"வருணை எதுவரைக்கும் போய் தேடிப் பார்த்தே?"

"இட்டத்தட்ட இந்த ஏரியாவையே அரை மணி நேரம் அலசிப் பார்த்துட்டேன்..."

"வழியில யாரையாவது பார்த்து விசாரிச்சியா?"

"ம்...! யூகலிப்டஸ் இலைகளையும், பட்டைகளையும்





பொறுக்கிக் கூடையில் போட்டுக்கிட்டு இருந்த நாலைஞ்சு பெண்களை நிறுத்தி– 'இந்தப் பக்கம் எந்தப் பையனையாவது பார்த்திங்களா?'ன்னு கேட்டேன். அவங்க 'பார்க்கலை'ன்னு சொல்லிட்டாங்க..."

அரி கவலையாய் ஒரு யூகலிப்டஸ் மரத்தில் சாய்ந்தன்.

"அவன் எங்கே போய் இருப்பான்னே தெரியலையே?"

ஜெயா அழுகையோடு இடைமறித்தாள்.

"ஒருவேளை யாராவது கடத்திக்கிட்டுப் போய் இருப்பாங்களோ...?"

கிறிஸ்டோபர் மறுத்தான்.

"நிச்சயமா அப்படி நடந்திருக்க வாய்ப்பே இல்லை அரி. ஏன்னா... இந்த இடத்துல நான் பைக்கை நிறுத்தியபோது இங்கே வேற யாருமே இல்லை. அட்லீஸ்ட் ஒரு வாகனமாவது என் கண்ணுல பட்டிருக்கணும். படலையே!"

"சரி... இப்ப என்ன செய்யலாம் கிறிஸ்டோபர்? நீயே சொல்லு. நீ போலீஸ் டிபார்ட்மெண்ட். எதுவாக இருந்தாலும் உன்னோட யோசனைப்படி செய்யலாம்."

"முறைப்படி போலீஸ்ல ஒரு புகார் குடுத்துடுவோம். தனிப்பட்ட முறையில் நாமும் தேடுவோம். ஆனா, ஒரு விஷயம் உறுதி. ஓட்டல் அறையில இருந்த போதும் சரி... பைக்கல என்னோடு வந்தபோதும் சரி... வருண் கொஞ்சம் 'மூட் அவுட்' ஆன மாதிரி இருந்தான். அப்படி அவன் இருந்ததுக்கு என்ன காரணங்கிறதை மொதல்ல கண்டுபிடிக்கணும். அதைச் செய்தாலே அவன் காணாமே போனது எப்படின்னு தெரிஞ்சுடும்..."

## 6

**து**ர்கா வியப்பாய் நிமிர்ந்தாள்.

ஒரு கேலிப் புன்னகை உதட்டில் ஒட்டிக்கொள்ள

கேட்டாள்.

"என்ன சொன்னீங்க மாமா...? வல்லப்புக்கு கல்யாண ஒன்னு நடந்தா ரொம்ப நாளைக்கு உயிரோ இருக்கமாட்டாரா...?"

"ஆமா..."

"இதைச் சொன்னது யாரு...? நம்ம குடும்ப ஜோ மாதையாவா?"

"ஆமா..."

"ரொம்ப நாளைக்குன்னா... எவ்வளவு நாளைக்கு?"

"ஒரு ஆறு மாசத்துக்குள்ளே..."

துர்கா புன்னகைத்தாள்.

"நம்ம ஜோசியர் மாதையாவுக்குப் போன தீபாவளி பணமும், துணியும் தராமே விட்டுட்டீங்க போலிருக்கு. அ அவரோட கோபத்தை இப்படிக் காட்டி இருக்கார். ஒரு ரூபாயைக் கையில் குடுத்துட்டு, ஜாதகத்தைக் காட்டி இரு அவர் வல்லப்போட ஜாதகத்தைப் பார்த்துட்டு நல்ல வி சொல்லி இருப்பார்.

உமாபதி குறுக்கிட்டார்.

"நீ நினைக்கிறது தப்பும்மா. ஜோசியர் மாதையா பணத் ஆசைப்பட்டு ஜோசியம் சொல்லக்கூடியவர் இல்லை. ஜாதக எப்படி இருக்கோ அதை மறைக்காமே அப்படியே சொல் அவர் ஜோசியம் சொல்லி இதுவரைக்கும் எதுவும் பொய்யா போனது இல்லை. அதுக்கு எத்தனையோ உதாரணங்க சொல்ல முடியும்."

துர்கா புன்னகை மாறாமல் கேட்டாள்.

"எங்கே... சொல்லுங்க பார்க்கலாம்!"

"போன வருஷம் கோயமுத்தூர்ல ஒரு மில் விலை வந்தது. அதை வாங்கலாமா, வேண்டாமான்னு கேட்டே 'வேண்டாம். அந்த மில்லு கட்டின இடம் சரியில்லை. அடு மூணு மாசத்துக்குள்ளே அந்த மில்லு ஒரு தீ விபத்துல சி



அடியோடு எரிஞ்சு சாம்பலாயிடும்'னு சொன்னார்."

"அவர் சொன்ன மாதிரியே நடந்ததாக்கும்?"

"பின்னே... ரெண்டு மாசம் கூட இல்லை. அந்த மில்லு மேல இடி விழுந்து, எல்லாமே எரிஞ்சு சர்வ நாசம். பிரீமியம் சரியா கட்டாததினால இன்சூரன்ஸ் தொகையும் கிடைக்காதாம்..."

துர்கா இன்னமும் புன்னகை கலையாமல் கேட்டாள்... "சரி... இன்னொரு உதாரணம்...?"

"உங்க அம்மா உடம்புக்கு முடியாமே படுத்துட்டு இருந்தபோது– 'என்ன வைத்தியம் பண்ணினாலும் குணமாக வாய்ப்பே கிடையாது. அம்மாவோட ஆயுள் அவ்வளவுதான். வர்ற அமாவாசையைத் தாண்டமாட்டாங்கன்'னு ஜோசியர் சொன்னார். ஆனா, நம்ம குடும்ப டாக்டர், அதைக் கிண்டல் பண்ணினார். அம்மாவைப் பிழைக்க வைச்சுக் காட்டுறேன்னு பந்தயம் போட்டார். கடைசியில் ஜெயிச்சது ஜோசியர்தான். அவர் சொன்ன மாதிரியே உங்க அம்மா அடுத்த அமாவாசை அன்னிக்குப் போய் சேர்ந்துட்டா..."

"உதாரணங்கள் இன்னும் கையிருப்பு இருக்கா? இல்ல தீர்ந்து போச்சா...?"

"என்னம்மா...! நான் சொன்னதுல உனக்கு நம்பிக்கை இல்லையா...?"

"அப்பா...! இந்த விஞ்ஞான உலகத்துல ஜோசியம், ஜாதகம் இதெல்லாம் வெறும் பொய். நான் நம்பத் தயாரா இல்லை."

"அப்படின்னா... ஜோசியர் சொன்ன மாதிரி மில்லு எரிஞ்சதும், உங்க அம்மா செத்ததும் பொய்யா...?"

"அப்பா! நம்ம ஜோசியர் உங்க ஜாதகப்படி பார்த்துப் பலன்கள் சொல்லலை. ஏதோ சொல்லி வைப்போமேன்னு சொல்லி இருக்கார். அது காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதையா நடந்திருக்கு. அவ்வளவுதான்!"

உமாபதி லேசாய்க் கோபப்பட்டார்.

"அம்மா! இதையெல்லாம் விளையாட்டா நினைக்காதே...

ஜோதிடம், ஜாதகம் இதெல்லாம் ஒரு அறிவியல். சரியா ப சொல்றவங்க சொன்னா பலிக்கும்... நடக்கும். நம்ம ஜோ மாதையா ஜோதிட– ஜாதகக் கலையை கரைச்சுக் குடிச்சவர் சொன்னது இதுவரைக்கும் பொய்யாய்ப் போனதில்லை

"அது பொய்யாப் போகும்."

"எது...?"

"வல்லப் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா மாசத்துக்குள்ளே செத்துப் போயிடுவாருன்னு ஜோ சொன்னது பொய்யாப் போகும்..."

"அப்படின்னா நீ அந்தப் பையனை...?"

"கல்யாணம் பண்ணிக்கத்தான் போறேன்..."

"துர்கா...! பெரியவங்க நாங்க சொல்றதை நீ கேட்க பிடிவாதம் பிடிச்சு உன் தலையில நீயே மண்ணை அ போட்டுக்காதே..."

துர்கா சிரித்தாள்.

"நான் என்னோட தலையில மண்ணைப் போ மாட்டேம்ப்பா. அட்சதையைத்தான் போட்டுக்குவேன். ஜாதகம், ஜோதிடம் எல்லாத்தையும் ஒரு பக்கமாக மூட்டைக் வெச்சுட்டு என்னோட கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடு கவனியுங்கப்பா..."

"அவசரப்படாதேம்மா... இதுல யோசனை பண்ண வேண்டி நிறைய இருக்கு..."

"அப்பா...! நீங்க தாராளமா யோசனை பண்ணுங்க. யோச பண்ண எவ்வளவு நேரம்ன்னாலும் எடுத்துக்குங்க. ஆனா, அ யோசனையின் முடிவு கடைசியில் எனக்கு சாதகமாகத் இருக்கணும். அதாவது எனக்கும், வல்லபுக்கும் கல்யாண நடத்தற முடிவுக்குத்தான் நீங்க வரணும்..."

உமாபதி பெருமூச்சோடு மகளை ஏறிட்டு– குரல் தழுதழு சொன்னார்.

"அம்மா... துர்கா! கல்யாணங்கிறது ஒரு நாளோடு முடி



போயிடற தாலி கட்டற விஷயமில்லை. அதுக்கு அப்புறம்தான் ன்னோட வாழ்க்கையே தொடங்குது. எடுத்தேன், கவிழ்த்தேன்னு ந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது."

"அப்பா... உங்க நிலைமை எனக்குப் புரியுது. ஆனா, ஜாதகம் ரியில்லைங்கிற காரணத்துக்காக வல்லபை மறந்துட்டு வேற ருத்தருக்கு நான் கழுத்தை நீட்ட முடியாதே..."

"வல்லப்கிட்டே சொல்லிப் பாரும்மா..."

"என்னை மாதிரியேதான் அவருக்கும் அந்த ஜோதிடம், ாதகத்துல நம்பிக்கை கிடையாது. இப்படி ஒரு விஷயத்தை அவர்கிட்ட சொன்னா நாள் பூராவும் சிரிப்பார்."

தயாவும், சுதாகரும் ஏதோ சொல்ல வர– துர்கா அவர்களைக் கையமர்த்தினாள்.

"மாமா... சித்தப்பா! நீங்களும் சரி, அப்பாவும் சரி... என்னதான் சொன்னாலும்... நான் வல்லபைத் தவிர வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். இப்படி ஆளுக்கு ஆள் யோசனை சொல்றதை விட்டுட்டு, கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனியுங்க, போங்க..."

துர்காவின் குரலில் உறுதி தொனிக்க–

உமாபதி, தயா, சுதாகர் மூன்று பேரும் இருள் படிந்த முகங்களோடு ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டார்கள்.

## 7

போலீஸ் நிலையம்.

ஜெயா, அரி , கிறிஸ்டோபர்– மூன்று பேரும் இன்ஸ்பெக்டர் ஞ்சுண்டாவுக்கு முன்பாய் மோவாய்களைத் தாங்கியபடி ட்கார்ந்திருக்க– அவர் 'வயர்லெஸ் செட்'டில் பேசிவிட்டு றுக்கிய மீசைக்குக் கீழே புன்னகைத்தார்.

"இந்த மலைப் பகுதியில் இருக்கிற எல்லா போலீஸ்

நிலையங்களுக்கும் தகவல் கொடுத்திருக்கேன். மின்
இன்ஸ்டோபர் எங்க போலீஸ் துறை. பையன் வருண் அவர்கிட்ட
இருந்து காணாம போய் இருக்கிற விஷயம் எங்களை
பொறுத்தவரை மிகப் பெரியது. எப்படியும் அடுத்த
நேரத்துக்குள்ளே பையனை கண்டுபிடிச்சிடுவோம்... பையனோட
படம் ஏதாவது இருக்கா...?"

"கைவசம் இல்ல சார்..."

"போட்டோ இருந்ததுன்னா பையனை இன்னும்
சுலபமா கண்டுபிடிக்க முடியும். உங்களுக்கு சொந்த ஊர்
சென்னைதானே...?"

"ஆமா... சார்..."

"சொந்தமா தொழில் செய்றீங்களா? வேலைக்கு
போறீங்களா?"

"தொழில்தான்...! பர்னிச்சர் தயார் பண்ணுறோம்..."

"ஊட்டிக்கு நீங்க வர்றது இதுதான் முதல் தடவையா?"

"இல்ல சார்... நான் நிறைய தடவை வந்திருக்கேன். என்னோட
மனைவி ஜெயாவுக்கும், வருணுக்கும் இது முதல் தடவை..."

"வருண் இன்னிக்கு மத்தியானத்தில் இருந்து 'மூட் அவுட்'டா
மாதிரி இருந்ததா சொன்னீங்களே... அதுக்கான காரணத்தை
யூகம் பண்ணினீங்களா...?"

"இல்லை. ஆனா, ஒரு அனுமானம் பண்ணி வெச்சோம்..."

"என்ன...?"

"அவன் கொஞ்சம் 'ஹோம் சிக்'. ஊர்ல இருக்கிற தாத்தா
பாட்டிகிட்டே ரொம்பவும் ஒட்டுதல். ஊர் ஞாபகம் வந்து
அப்படி இருக்கானோன்னு யூகம் பண்ணினோம்..."

"இன்னிக்கு அவன்கிட்டே ஏதாவது கோபமா
நடந்துக்கிட்டீங்களா?"

"இல்லையே...! மத்தியானம் சாப்பிடற வரைக்கும் சந்தோஷமா
சிரிச்சுப் பேசிக்கிட்டு இருந்தான். கடி 'ஜோக்' நிறைய சொன்னான்.
ஓட்டலில் இருந்து லாட்ஜ் திரும்பும்போதே ஒரு மாதிரியா



ஆயிட்டான்."

"எந்த ஓட்டலுக்குப் போனீங்க...?"

"புதுசா கட்டின ஓட்டல் மவுண்ட்."

"ஹோலிகிராஸ் ரோட்ல இருக்கே... அந்த ஓட்டலா...?"

"அதேதான்..."

"ஓட்டல்ல அவனோட மனசு புண்படுற மாதிரி ஏதாவது
பேசிட்டீங்களா..."

"இல்லையே..."

"ஓட்டலுக்கு நீங்க மூணு பேர் மட்டும்தானே போனீங்க...?"

"ஆமா..."

"அந்த ஓட்டல்ல வேற யாரையாவது பார்த்தீங்களா...?"

"இல்லையே..."

அரி சொல்லி தலையாட்டிக்கொண்டு இருக்கும்போதே
ஜெயா குறுக்கிட்டாள்.

"இன்ஸ்பெக்டர்..."

"என்னம்மா...?"

"இப்பத்தான் எனக்கு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருது.
ஓட்டல்ல வருண் சாப்பிட்டுட்டு இருந்தப்ப பக்கத்து மேசையில்
'சர்வ்' பண்ணிட்டு இருந்த ஒரு பேரரையே வெச்ச கண்ணு
வாங்காமே பார்த்துகிட்டு இருந்தான். நானும்கூட ஒரு
தடவை வருண்கிட்டே, 'ஏன்டா அந்த பேரரையே உத்து உத்து
பார்த்துகிட்டு இருக்கே... என்ன விஷயம்?'னு கேட்டேன்.
'ஒண்ணும் இல்லை'ன்னு சொல்லிட்டான். அதுக்கப்புறம்
'வாஷ்பேசின்'ல கை கழுவப் போகும்போது அந்த 'பேரர்'கிட்டே
பேசிட்டிருந்தான்."

"என்ன பேசிட்டிருந்தான்...?"

"தெரியலை..."

"நீங்க கேட்கலையா...?"

"கேட்டோம்."

"என்ன சொன்னான்!"

"டாய்லட் எங்கே இருக்குன்னு கேட்டானாம்?"

"ஓட்டல்ல அவன் 'டாய்லட்' போனானா?"

"இல்லையே!"

"டாய்லட் எங்கே இருக்குன்னு கேட்டுட்டு, அவன் ஏன் டாய்லட்டுக்குப் போகலை?"

"இப்ப நீங்க கேட்கும்போதுதான் எங்களுக்கே சந்தேகம் வருது சார்..."

இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா யோசனையில் சில விநாடிகளைக் கழித்துவிட்டு– அரியை ஏறிட்டபடி கேட்டார்.

"வருண் பேசிட்டிருந்த அந்த "பேரர்" யாருன்னு உங்களுக்கு அடையாளம் தெரியுமா...?"

"தெரியும்."

"வாங்க... போய் பேசிப் பார்க்கலாம்."

அவசரமாக கிளம்பினார்கள்.

## 8

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு– கட்டிலில் சாய்ந்து டி.வி பார்த்துக்கொண்டிருந்த துர்க்கா– டி.வி.யை அணைத்துவிட்டு எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

கதவுக்கு வெளியே அப்பா உமாபதி.

அவருக்குப் பின்னால் ஜோசியர் மாதையா.

உமாபதி ஒரு அசட்டு சிரிப்போடு உள்ளே வந்தார்.

"என்னம்மா டி.வி. பார்த்துட்டு இருந்தியா...?"

"ம்..."

ஜோசியர் உள்ளே வந்து பவ்வியமாக ஒரு வணக்கம் சொல்ல–



துர்கா புன்னகைத்தாள்.

"என்ன ஜோசியர்! எனக்கு வேப்பிலை அடிக்க வந்திங்களா...?"

"அம்மா...! ஜோதிடம் ஒரு அபூர்வமான கலை. அது மகா யோகிகளாலும், சித்தர்களாலும் எழுதப்பட்ட மனித வாழ்க்கையின் கணிதம்."

துர்கா கையமர்த்தினாள்.

"இந்தக் கதாகாலட்சேபம் எல்லாம் என்கிட்ட வேண்டாம். இங்கே எதுக்காக வந்திங்களோ... அந்த விஷயத்தை சொல்லிட்டுப் போயிட்டே இருங்க. நான் டி.வி.யில ஒரு முக்கியமான நிகழ்ச்சி பார்க்கணும்..."

"அது வந்தும்மா... உனக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளை ஜாதகம் அவ்வளவா சரியில்லை."

"எவ்வளவு சரியில்லை! பத்து கிலோவா, பதினைஞ்சு கிலோவா...?"

"அம்மா! இது கேலி பேசக்கூடிய விஷயம் இல்லை. அந்த வல்லப்போட ஜாதகத்துல களத்திர தோஷம் இருக்கு. அவர் எந்தப் பொண்ணுக்கும் மாங்கல்ய பாக்கியத்தைக் கொடுக்கமாட்டார். கொஞ்ச நாள்தான் அந்த மணவாழ்க்கை."

துர்கா பலமாக சிரித்தாள்.

"நேத்து பூராவும் அப்பா, சித்தப்பா, மாமா எல்லாரும் சொல்லிப் பார்த்துட்டாங்க. இப்ப நீங்க என்ன சொல்லணுமோ சொல்லிட்டுப் போங்க..."

"அம்மா! இந்தக் கல்யாணம் வேண்டாம். வேற நல்ல வரனா பார்த்து..."

"இதோ பாருங்க ஜோசியரே! நானும், வல்லபும் உயிர்க்கு உயிரா ஒருத்தரை ஒருத்தர் காதலிக்கிறோம். அவர் பெரியவங்களா பார்த்து முடிவு பண்ணின மாப்பிள்ளை இல்லை. அந்தக் கடவுளா பார்த்து எனக்கு முடிச்சுப் போட்ட வரன். எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது வல்லப்போடுதான் நடக்கும்.

நீங்க சொல்ற மாதிரி அவருக்கு ஆயுசு, நாள் கணக்கில் இ... வருஷக்கணக்கில். நானும், அவரும் நூறு வயசு வரை வா... காட்டுறோம்... பார்க்கறீங்களா...?"

"அவரோட ஜாதகப்படி அது முடியாதும்மா. ... கிரகங்களுமே அவரோட ஜாதகத்துல மோசமா, பலவீ... இருக்கு..."

"கிரகங்கள் மோசமா இருக்கா?"

"ஆமாம்மா..."

"ஒரு நல்ல டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போய் கா... மாத்திரையும், டானிக்கும் வாங்கிக் கொடுத்து உடம்பைத் ... வேண்டியதுதானே...?"

"இப்படியெல்லாம் கேலி பேசக் கூடாதும்மா. கல்யாணம்... ஆயிரம் காலத்துப் பயிர். ஜாதகத்துல எல்லாப் பொருத்... இருக்கான்னு பார்த்துட்டுத்தான் கல்யாணம் பண்ணணும்..."

"அய்யோ ஜோசியரே...! போயிட்டு வர்றீங்களா...? ... டி.வி.யில 'பேஷன் ஷோ' பார்க்கணும்."

துர்கா சொல்லிக்கொண்டே தன் கையில் வைத்தி... 'ரிமோட்'டை உயிர்ப்பிக்க- சின்னத்திரையில் சோ... விளம்பரத்தில் அந்தப் பெண் துள்ளிக் குதித்தாள்.

"அம்மா... நான் சொல்றதுல உனக்கு நம்பிக்கை இல்லேன்... வேற ஜோசியர் சில பேர்கிட்ட காட்டி-"

"அவசியமே இல்லை..."- டி.வி.யின் சத்தம்... அதிகரித்தாள்.

உமாபதியும், ஜோசியரும் சில விநாடிகள் வரை அங்கே... நின்றிருந்தவர்கள் பின்னர் மவுனமாய் வெளியே வந்தார்கள்.

உமாபதி புலம்பினார்.

"இப்படி அடம் பிடிக்கிறாளே?"

"என்ன சொன்னாலும் கேட்கக் கூடிய நிலைமையில் ப... பொண்ணு இல்லை..."

"என்ன பண்ணலாம் ஜோசியரே?"



"எனக்கும் ஒண்ணும் புரியலை... பேசாமே கடவுள் மேல பாரத்தைப் போட்டுட்டு கல்யாணத்தைப் பண்ணி வெச்சுடுங்க. அதுக்கப்புறம் துர்காவோட பிராப்தம்."

"ஜோசியரே! இந்தக் களத்திர தோஷத்துக்கு ஏதாவது பரிகாரம் இருக்கா..."

"பரிகாரம் இருந்தா முதலிலேயே சொல்லி இருக்கமாட்டேனா..? இருந்தாலும் உங்க மனத் திருப்திக்காக ஒரு பரிகாரம் சொல்றேன்."

"சொல்லுங்க..."

"கூட்டு எண் ஒன்பது வர்ற ஒரு தேதியில், வீட்ல வரலட்சுமி பூஜை வெச்சு ஒன்பது சுமங்கலிகளுக்குப் புடவை, ஜாக்கெட், மஞ்சள், குங்குமம் கொடுத்து அவங்க கால்ல விழுந்து உங்க பொண்ணு ஆசீர்வாதம் வாங்கணும். இது ஒரு பரிகாரம். இந்தப் பரிகாரத்தை முகம் சுளிக்காம சந்தோஷமா பண்ணணும்..."

"பண்ணிடலாம் ஜோசியரய்யா. ஒன்பது சுமங்கலிகளுக்குப் பட்டுப் புடவையாவே எடுத்துக் கொடுத்துடலாம். எம் பொண்ணு கழுத்துல தாலி நிலைச்சா சரிதான்."

ஈரமாகிவிட்ட கண்களை- தோளில் போட்டிருந்த மேல் துண்டால் துடைத்து விட்டுக்கொண்டார் உமாபதி.

## 9

ஓட்டல்.

"அதோ... அந்த 'பேரர்'தான்."

அரி கைகாட்ட- இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா, வாடிக்கையாளர் ஒருவரிடம் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த அந்த 'பேரரை' நோக்கிப் போனார்.

பேரருக்கு நாற்பது வயது இருக்கலாம். புஷ்டியான இரட்டை நாடி உடம்பு.

இன்ஸ்பெக்டரைப் பார்வையில் வாங்கியதும் மிரண்டா பக்கத்தில் நெருங்கிய நஞ்சுண்டா, தன் கையில் வைத்திரு லத்தியால் அவனுடைய தோளைத் தொட்டபடி கேட்டார்.

"உம் பேர் என்ன...?"

"க...க... கதிர்வேலு சார்..."

"இவங்க யாருன்னு தெரியுதா?"

அரியையும், ஜெயாவையும் சுட்டிக் காட்டியபடி கேட்டா

'பேரர்' கதிர்வேலு அவர்களை உற்றுப் பார்த்துவிட் தயங்கித் தயங்கி மெல்லிய குரலில் சொன்னான்.

"இவங்க மத்தியானம் இந்த ஓட்டலுக்கு சாப்பிட வந்தா சார்..."

"இவங்கக்கூட ஒரு பையனும் வந்தான். ஞாப இருக்கா...?"

"இ... இருக்கு சார்..."

"அந்தப் பையன் இப்போ எங்கே?"

'பேரர்' திகைத்தான்.

நஞ்சுண்டா தொடர்ந்தார்.

"என்ன அப்படிப் பார்க்கிறே...? பையன் இப்போ உன்னோ 'கஸ்டடி'யில்தானே இருக்கான்..."

"சார்... என்ன சார் இது அபாண்டம்? அந்தப் பையனை பத்தி எனக்கென்ன சார் தெரியும்...?"

"சரி... அந்தப் பையன் இன்னிக்கு மத்தியானம் இந்த ஓட்டலுக் வந்தபோது உன் கூட பேசி இருக்கான் இல்லையா...?"

"ஆ...ஆமா சார்..."

"என்ன பேசினான்..."

"சார்... அது வந்து..."

"சொல்லு..."

"அது எனக்கே ஒரு குழப்பமான விஷயம் சார்."

"குழப்பமான விஷயமா?"



"ஆமா சார்... அந்தப் பையன் சாப்பிட்டுடுக் கையைக் கழுவுறதுக்காக 'வாஷ்பேசின்' கிட்டே வந்தான். வந்தவன் கையைக் கழுவாமே என்னையே உத்து உத்து பார்த்துட்டிருந்தான். 'என்னதம்பி... பார்க்கிறே?'ன்னு கேட்டேன். அதுக்கு அவன் பக்கத்துல வந்து, 'உன்னோட பேர் கதிர்வேலுதானே?'ன்னு கேட்டான். அதுக்கு நான் 'ஆமா'ன்னு தலையாட்டிட்டு, 'என்னோட பேர் உனக்கு எப்படித் தெரியும்?'ன்னு கேட்டேன். அதுக்கு அவன் எந்தப் பதிலும் சொல்லாமே போயிட்டான்."

ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.

இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா அரியை வியப்பாய் பார்த்தார்.

"என்ன மிஸ்டர் அரி... 'பேரர்' கதிர்வேலுவை வருணுக்கு எப்படித் தெரியும்...?"

"ஒண்ணும் புரியலை சார். கதிர்வேலுவை இதுக்கு முந்தி நாங்க பார்த்ததே இல்லை..."

சொன்ன அரி, கதிர்வேலுவை ஏறிட்டான்.

"உனக்கு சொந்த ஊர் எது...?"

"இதே ஊட்டிதான் சார். பொறந்தது... வளர்ந்தது... கல்யாணம் பண்ணிக்கிட்டது எல்லாமே இந்த ஊர்தான்."

"நீ எப்பவாவது சென்னைக்கு வந்திருக்கியா?"

"இல்ல சார்... ஊட்டியைவிட்டு வெளியே போறதே கிடையாது. ரெண்டு, மூணு தடவை மேட்டுப்பாளையம் போய் இருக்கேன். அவ்வளவுதான்."

இன்ஸ்பெக்டரைப் பார்த்தான்.

அரி திகைப்பாய் "ஊட்டிக்கு வருண் வந்தது இதுதான் முதல் தடவை

"சார்... கதிர்வேலுவை அவனுக்குத் தெரிஞ்சிருக்க வாய்ப்பே இல்லை. இந்த 'பேரர்' பிரச்சினையைத் திசை திருப்புறதுக்காக எதையோ சொல்லிட்டிருக்கான்னு நினைக்கிறேன்..."

நஞ்சுண்டா, பேரரை ஒரு சந்தேகப் பார்வை பார்க்க– அவன் பதறிப்போய் கும்பிட்டான்.

"சார்... இப்ப நான் சொன்னதெல்லாம் சத்தியமான வார்த்தை. அந்தப் பையன் என்னை உத்து உத்துப் பார்த்ததும், உன்னோட பேர் கதிர்வேலுதானேன்னு கேட்டதும் உண்மை..."

அரி சீறினான்.

"அப்படி அவன் கேட்டிருந்தா உடனடியா நீ என்ன பண்ணி இருக்கணும்? என்கிட்ட வந்து– 'என்ன சார்... பையன் இப்படி சொல்றான்...? என்னோட பேர் அவனுக்கு எப்படி தெரிஞ்சது?'ன்னு நீ கேட்டிருக்கணும்..."

"அந்த நேரத்துல எனக்கு எதுவுமே தோணலை சார். ஓட்டல்ல அப்ப கூட்டமா வேற இருந்தது. மற்றவங்களைக் கவனிக்காமே உங்ககிட்ட வந்து பேசிட்டிருந்தா முதலாளி சத்தம் போடுவார்ன்னு நினைச்சு பிரச்சினையை அதோடு விட்டுட்டேன்."

நஞ்சுண்டாய்யா தன் இடது கை விரல்களால் மோவாயைத் தடவிக்கொண்டே கதிர்வேலை கீழ்ப் பார்வை பார்த்தார்.

"உன்னை ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டுப் போனாத்தான் உண்மையைப் பேசுவே போலிருக்கு..."

"சா... சார்! என்னை... நம்புங்க சார். நான் சொன்னதெல்லாம் உண்மை சார்..."

'பேரர்' கதிர்வேலு கைகளைக் கூப்பி கதறிக்கொண்டு இருக்கும்போதே–

போலீஸ் ஜீப் டிரைவர் வேகவேகமாய் ஓட்டலுக்குள் வந்தார்.

"சார்..."



"என்ன...?"

"வயர்லெஸ்ல உங்களுக்காக ஒரு தகவல் காத்திட்டிருக்கு சார்..."

நஞ்சுண்டா வேகவேகமாய் ஓட்டலை விட்டு வெளியேறி– ஒரு மரத்துக்குக் கீழே நின்றிருந்த ஜீப்புக்குப் போனார்.

ஜீப்பில் பொருத்தப்பட்டிருந்த வயர்லெஸ்– மழை பெய்வது போன்ற இரைச்சலுக்கு நடுவே பேசிக்கொண்டிருந்தது.

"வாண்ட் ஆப் இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா... வாண்ட் ஆப் இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா..."

'வயர்லெஸ்' சாதன ஸ்பீக்கரை எடுத்து குரல் கொடுத்தார் நஞ்சுண்டா.

"ஹோல்டிங்..."

"இது ஊட்டி கண்ட்ரோல் ரூம்."

"சொல்லுங்க..."

"வருண் என்ற எட்டு வயதுப் பையன் காணாமல் போனது சம்பந்தமாய் ஒரு தகவல் கிடைத்துள்ளது."

"என்ன தகவல்...?"

"தொட்டபெட்டா ரோட்டில் இருந்து இரண்டாவது கிலோ மீட்டரில் உள்ள மரப் பால அருவிக்குப் பக்கத்தில் ஒரு சிறுவனின் உடல் கிடப்பதாக தகவல். நீங்கள் கொடுத்த அடையாளங்களோடு அந்தச் சிறுவன் ஓரளவுக்கு ஒத்துப்போகிறான். நீங்கள் உடனே அந்த 'ஸ்பாட்'டுக்கு சம்பந்தப்பட்டவர்களை அழைத்துக்கொண்டு போய் பார்த்து– அது நீங்கள் தேடிக்கொண்டிருக்கும் சிறுவன்தானா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இந்தச் செய்தி நீலகிரி மாவட்டத்தில் உள்ள எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் சொல்லப்பட்டுவிட்டது."

"இதோ...! நீங்கள் சொன்ன மரப்பால அருவி 'ஸ்பாட்'டுக்கு புறப்பட்டுவிட்டோம்."

நஞ்சுண்டா சொல்லி வயர்லெஸ்ஸை அணைத்தார்.

...குரல் சிரித்தது.

"நான் வல்லப்."

"என்ன ஒரு ஆனந்த அதிர்ச்சி!! எப்போ ஊ... வந்தீங்க...?"

"சரியா சொல்லணுமா...?"

"ஆமா..."

"பத்து நிமிடமாச்சு."

"இப்ப எங்கே இருந்து பேசிட்டிருக்கீங்க?"

"ஓட்டல் டான்..."

"ஊட்டிக்கு வந்தூட்டு எதுக்காக ஓட்டல்ல போய் த... நேரா நம்ம வீட்டுக்கு வர வேண்டியதுதானே?"

வல்லப் சிரித்தான்.

"ஸாரி மேடம்...! அது இன்னமும் வருங்கால மாமனா... வீடுதான். முறைப்படி மாமனார் வீடு ஆகட்டும். அப்பு... உரிமையோடு உன் வீட்டு போர்டிகோவுக்கு காரை கொண்... வர்றேன்."

"கல்யாண தேதிதான் 'பிக்ஸ்' பண்ணியாச்சே... அ... என்ன...?"

"அதுக்கு இன்னும் ஒரு மாசம் இருக்கே."

"சரி... வருங்கால மாமனார் வீட்டுக்கு ஒரு 'பார்மல்... கூட அடிக்கக் கூடாதா என்ன...?"

"இன்னிக்கு சாயந்தரம் வர்றேன்...! அதுக்கு முன்னாடி ...



அதிர்ஷ்டசாலி...

"சரி. போ...

புறப்பட்டு வா. ...

காத்திட்டிருப்பேன்."

"இதோ கிளம்பிட்டேன்."

... ரிஸீவரை வைத்து...

...வில் சாய்ந்து ...

...வக்குக் கிடை...

"யாரு..."

"வல்லப..."

உமாபதி ...

"எப்போ?"

"இப்பத்தா...

பார்த்து...

...ரையே இங்கே வர...

"சாயந்தரம் வர்றாராம். ...

# 10

தொலைபேசி கூப்பிட்டது.

வெளியே கிளம்பிப் போகத் தயாராக இருந்த துர்கா, சல்வார்கமீஸ் துப்பட்டாவை சரிப்படுத்திக்கொண்டே போய் ரிஸீவரை எடுத்து காதில் ஒட்ட வைத்தாள்.

"அலோ..."

மறுமுனையில் குரல் சிரித்தது.

"நான் வல்லப்."

"என்ன ஒரு ஆனந்த அதிர்ச்சி!! எப்போ ஊட்டிக்கு வந்தீங்க...?"

"சரியா சொல்லணுமா...?"

"ஆமா..."

"பத்து நிமிடமாச்சு."

"இப்ப எங்கே இருந்து பேசிட்டிருக்கீங்க?"

"ஓட்டல் டான்..."

"ஊட்டிக்கு வந்துட்டு எதுக்காக ஓட்டல்ல போய் தங்கணும்...? நேரா நம்ம வீட்டுக்கு வர வேண்டியதுதானே?"

வல்லப் சிரித்தான்.

"ஸாரி மேடம்...! அது இன்னமும் வருங்கால மாமனார் வீடுதான். முறைப்படி மாமனார் வீடு ஆகட்டும். அப்புறம் உரிமையோடு உன் வீட்டு போர்டிகோவுக்கு காரை கொண்டு வர்றேன்."

"கல்யாண தேதிதான் 'பிக்ஸ்' பண்ணியாச்சே... அப்புறம் என்ன...?"

"அதுக்கு இன்னும் ஒரு மாசம் இருக்கே."

"சரி... வருங்கால மாமனார் வீட்டுக்கு ஒரு 'பார்மல் விசிட்' கூட அடிக்கக் கூடாதா என்ன...?"

"இன்னிக்கு சாயந்தரம் வர்றேன்...! அதுக்கு முன்னாடி நீ



என்னை சந்திக்க வரணும்..."

"இப்பவே வர்றேன். பொழுது போகாமே 'லேடீஸ் கிளப்'புக்கு புறப்பட்டுப் போலாம்னு இருந்தேன். ஒரு ரெண்டு நிமிஷம் கழிச்சு நீங்க போன் பண்ணி இருந்தா நான் உங்களுக்குக் கிடைச்சிருக்க மாட்டேன். சரியான நேரத்துக்கு போன் பண்ணிட்டீங்க..."

"இதிலிருந்து ஒண்ணு தெரியுது."

"என்ன...?"

"நான் அதிர்ஷ்டக்காரன்னு..."

"உங்களை கல்யாணம் பண்ணிக்கப் போற நான்தான் அதிர்ஷ்டசாலி."

"சரி. போன்லயே பேசிட்டிருக்கிறதா உத்தேசமா... உடனே புறப்பட்டு வா. டான் ஓட்டல் 'ரிசப்ஷன் ஹால்'ல உனக்காக காத்திட்டிருப்பேன்."

"இதோ கிளம்பிட்டேன்."

துர்கா ரிஸீவரை வைத்துவிட்டு தன் அறையைக் கடந்து ஹாலுக்கு வர, சோபாவில் சாய்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்த உமாபதி பார்வைக்குக் கிடைத்தார்.

"அப்பா..."

"என்னம்மா...?"

கண்ணாடி அணிந்த முகத்தோடு நிமிர்ந்தார்.

"அவர் வந்திருக்கார்..."

"யாரு...?"

"வல்லப்..."

உமாபதி லேசாய் முகம் மாறி—

"எப்போ?" என்றார்.

"இப்பத்தான்! ஓட்டல்ல தங்கி இருக்கார். நான் போய்ப் பார்த்துட்டு வந்துடறேன்..."

"அவரையே இங்கே வரச் சொல்ல வேண்டியதுதானே...?"

"சாயந்தரம் வர்றாராம். போன் பண்ணி என்னைக் கூப்பிட்டார்.

போய்ட்டு வந்துடறேன்..."

உமாபதி மறுபடியும் வாயைத் திறந்து பேசும் முன்-
துர்கா போர்டிகோவுக்கு போய் காரில்
திணித்துக்கொண்டிருந்தாள்.

கார் கிளம்பி- வாட்ச்மேன் திறந்து வைத்த கேட் வழியா
அம்பு மாதிரி பாய்ந்து- சாலையின் போக்குவரத்தில் கல

ஊட்டியின் ஏற்ற இறக்க ரோடுகளில் சில நிமிடப் பய
ஓட்டல் டான், மலைத் தாவரங்களுக்கு மத்தியில் நா
அடுக்கு மாடிகளோடு குளிர்ச்சியாய் வந்தது.

நிசப்தமான ஓட்டல். பணக்காரர்களின் சொகுசுக்கா
கட்டப்பட்டது. பராமரிக்கப்பட்ட புல்வெளிகளுக்கு மத்தி
கான்கிரீட் பாதை அரைவட்டம் அடித்துக்கொண்டு போ
காரை அதில் விரட்டி போர்டிகோவில் போய் நிறுத்தினா
துர்கா.

கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்க-

ஸ்வெட்டரும், பேண்ட்டும் அணிந்த வல்லப் எதிரில் வந்
நின்று "வெல்கம்" என்று சொல்லி மஞ்சள் ரோஜா ஒன்
நீட்டினான்.

நன்றி சொல்லி வாங்கிக்கொண்ட துர்கா, வல்லப்போ
உள்ளே போனாள்.

வல்லப் கேட்டான்.

"கல்யாண ஏற்பாடுகள் எப்படி போயிட்டிருக்கு துர்கா...?"

"பைன்...! ரெண்டு செட் நகை பண்ணியாச்சு. வேண்டி
பட்டுப்புடவை எடுத்தாச்சு. அழைப்பிதழ் தயார் பண்ணியாச்சு.
அங்கே நிலவரம் எப்படி...?"

"ஏதோ போய்ட்டிருக்கு..."

"என்ன பேச்சுல சலிப்பு...?"

"சலிப்பு எனக்கு இல்லை துர்கா. என்னோட அப்பாவுக்கும்,
அம்மாவுக்கும்...! உங்க ஜோசியர் என் ஜாதகத்தைப் பத்தி
உங்ககிட்ட சொன்னதை நீங்க மறைச்சு வெச்சிருக்கணும்



என்னோட பெற்றோர்கிட்ட சொல்லியிருக்கக் கூடாது."

"நான் சொல்ல வேண்டாம்னுதான் எங்க அப்பாகிட்ட சொன்னேன். அவர் கேட்கலை. இது மாதிரியான விஷயங்களை மறைச்சு வைக்காமே வெளிப்படையா பேசிடறது நல்லதுன்னு சொன்னார்..."

இருவரும் வரவேற்பு அறையின் மையத்தில் போடப்பட்டிருந்த சோபாவுக்கு வந்தார்கள்.

பக்கம் பக்கமாய் சாய்ந்து உட்கார்ந்தார்கள்.

"துர்கா..."

"ம்..."

"நான் இப்போ எதுக்காக ஊட்டி புறப்பட்டு வந்தேன் தெரியுமா...?"

"எதுக்கு...?"

"உன்னைப் பார்த்து கொஞ்சம் தனியா பேசிட்டு போகத்தான்..."

துர்காவின் அழகான சந்தன நிற நெற்றியில் குழப்ப வரிகள் தோன்றி மறைந்தன.

"ஆறு மாசமா நாம காதலிச்சுட்டு வர்றோம். இனியும் நமக்குள்ளே என்ன தனிப்பட்ட விஷயங்கள்...?"

"துர்கா...! உனக்கும், எனக்கும் நடக்கப் போகிற கல்யாணத்தில் உன்னோட அப்பாவுக்கும் இஷ்டமில்லை. என்னோட வீட்டு பக்கமும் அவ்வளவா சந்தோஷம் இல்லை. கல்யாணம் நடந்தா என்னோட உயிருக்கு- ஜாதக ரீதியா ஆபத்து வரும்னு ஜோசியர் சொன்னது எங்கே பலிச்சிடுமோன்னு எல்லாரும் பயப்படறாங்க... இப்படியொரு சிக்கல் இருக்கும்போது நாம கல்யாணம் பண்ணிக்கிறது சரிதானா...?"

துர்கா மெல்லச் சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறே...?"

"சிரிக்காம என்ன பண்ணுறது வல்லப்? உங்களை நான் காதலிக்காமே இருந்திருந்தா இப்படியொரு பிரச்சினை வந்தே





இருக்காது. கடைசியில் நீங்களும் பயந்துட்டீங்க போலிருக்கு. உங்களுக்கு அப்படியொரு பயம் இருந்தா, அதை நேரடியாவே சொல்லலாம்... இப்படி அம்மா– அப்பா மேல பழியைத் தூக்கி போட வேண்டாம்..."

"இல்ல துர்கா...! எனக்கு இந்த ஜாதகம், ஜோஸியம் ஏன்... கடவுள் நம்பிக்கைக்கூட கிடையாது. ஏதோ பிறந்தோம், வாழ்ந்துட்டிருக்கோம் என்கிற கோட்பாடுதான் உண்டு. கல்யாணத்துக்கு மண்டபம் தேவையில்லை, ஐயர் தேவையில்லை. இதே இடத்துலகூட உன் கழுத்துல தாலி கட்ட நான் தயார். ஆனா... என்னோட நியாயமான பயம் என்னான்னா..."

"சொல்லுங்க..."

"ஒருவேளை கல்யாணத்துக்கு அப்புறம் எனக்கு ஏதாவது ஒன்னு ஆயிட்டா...?"

"..............."

"அது உன்னோட வாழ்க்கையைத்தானே பாதிக்கும்! அதனால..."

"அதனால...?"

"நீ வேற ஒரு நல்ல மாப்பிள்ளையா பார்த்து கல்யாணம் பண்ணிகிட்டா... எனக்கு..."

துர்கா, வல்லபை கையமர்த்தினாள்.

"ஒரு நிமிஷம்..."

சொன்னவள், அந்தப் பக்கமாய் போன 'பேரர்' ஒருவரைக் கூப்பிட்டாள்.

"பிளீஸ்! ஒரு தம்ளர் தண்ணீர் குடுக்க முடியுமா?"

'பேரர்' உடனே கொண்டு வந்து வைத்துவிட்டு நகர்ந்தான்.

வல்லப் கேட்டான்.

"எதுக்கு இந்தத் தண்ணி?"

"மாத்திரை சாப்பிடத்தான்."

"மாத்திரையா... என்ன மாத்திரை?"

துர்கா தன் கையில் வைத்திருந்த 'பேக்'கைப் பிரித்து, மாத்திரை

பட்டையை எடுத்தாள்.

"வல்லப்...! இதுல ஒரு மாத்திரை சாப்பிட்டா தூக்கம் வரும். ரெண்டு மாத்திரை சாப்பிட்டா இருக்காது. மூணு மாத்திரை சாப்பிட்டா 'கோமா' நாலாவது மாத்திரைக்கு யாத்திரை போக வேண்டியது இந்தக் கல்யாணம் எந்த ஒரு காரணத்துக்காகவும் நிற்கக் ஜாதகத்துல தோஷம் அது இதுன்னு சொல்றதெல்லாம் கதை. என்னோட சித்தப்பாவும், தாய்மாமனும், அந்த ஜோசிய சேர்ந்துகிட்டு பண்ணுற சதி.

அந்தச் சதிக்கு நாம பலியாகிட கூடாது. எனக்கு கட நம்பிக்கை நிறைய இருக்கு. அந்தக் கடவுள் உங்களை என்னையும் நூறு வருஷம் வாழ வைப்பார். இவ்வளவு சொ பின்னாடியும் நீங்க கல்யாணம் பண்ணிக்கத் தயங்கினா, இ மாத்திரைப் பட்டைக்குள்ளே இருக்கிற நாலு மாத்திரையும் எ வயித்துக்குள்ளே போயிடும்..."

துர்காவின் கையில் இருந்த மாத்திரை பட்டையைப் பறித்தா வல்லப்.

"இப்பேர்ப்பட்ட முட்டாள்தனத்தை எல்லாம் பண்ணிடாதே நம்ம கல்யாணம் கண்டிப்பா நடக்கும்."

"நிஜமா...?"

"சத்தியமா...?"

"அப்புறம் ஊருக்குப் போனதும் மனசு மாறிடக் கூடாது."

"இனி மாற மாட்டேன். ஆனா, எனக்கு ஒரு சந்தேகம்."

"என்ன...?"

"உன்னோட சித்தப்பா– தாய் மாமன் ரெண்டு பேருமா சேர்ந்து நம்ம கல்யாணத்தை நடக்கவிடாம பண்ணுறதுல அவங்களுக்கு என்ன லாபம்?"

"எல்லாம் எங்க அப்பாகிட்ட இருக்கிற கோடிக்கணக்கான சொத்துக்கு ஆசைப்பட்டுத்தான். எனக்கு கல்யாணமாகி என் மூலமாக வாரிசுகள் உருவாயிட்டா, அவங்களுக்குக் கிடைக்க



வேண்டிய சொத்தோட அளவு குறைஞ்சு போகுமே...?"

"இதெல்லாம் உங்க அப்பாவுக்கு தெரியாதா?"

"தெரியாது. அவங்க எதைச் சொன்னாலும் சரி, எங்க அப்பாவுக்கு அதுதான் வேதவாக்கு. மறுத்து பேசக்கூட மாட்டார். அவங்க ரெண்டு பேர் முகத்திலேயும், ஜோசியர் முகத்திலேயும் கரி பூசற மாதிரி நாம வாழ்ந்து காட்டணும்."

"காட்டுவோம்."

வல்லப் சிரித்தான்.

## 11

**ம**ரப் பால அருவிக்குப் பக்கத்தில் ஒரு கும்பல் கூடி இருக்க– அதற்குப் பக்கத்தில் போய் போலீஸ் ஜீப் நின்றது.

இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா கீழே இறங்க– அவரைத் தொடர்ந்து அரி , ஜெயா, கிறிஸ்டோபர் இறங்கினார்கள்.

ஜெயா கண்களில் நீரோடு சேலைத் தலைப்பை வாய்க்குக் கொடுத்து பொத்தி இருந்தாள்.

நஞ்சுண்டா முன்னால் போக– கூட்டம் விலகியது.

சப்–இன்ஸ்பெக்டர் ஒருவர் எதிர்ப்பட்டார். ஒரு சல்யூட்டை விநியோகித்தார்.

"சார்..."

"பையன் எங்கே...?"

"ஆஸ்பத்திரியில 'அட்மிட்' பண்ண 'கான்ஸ்டபிள்ஸ்' கொண் போய் இருக்காங்க சார்..."

"பையன் உயிரோடு இருக்கானா?"

"ஆமா சார்..."

"கண்ட்ரோல் ரூமில் இருந்து எனக்கு வந்த தகவல் பையனோட உடல்னு சொன்னாங்களே?"

"சார்... அவங்க அப்படி சொன்னத்துக்கு காரணம், பை

மூச்சு பேச்சு இல்லாமே இந்தப் பள்ளத்துல விழுந்து கிடந்தது... பையனை பள்ளத்தில் இருந்து மேலே கொண்டு... பிறகுதான், உடம்பில் உயிர் இருக்கிறது தெரிஞ்சுது. உடனே... ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக ஏற்பாடு பண்ணிட்டோ... பையனுக்கு நெற்றியில் லேசான அடி. மற்றபடி எந்தக் காய... இல்லை."

"பையன் இந்தப் பள்ளத்துக்குள்ளே விழுந்து கிடந்த... பார்த்தது யாரு...?"

கும்பலில் நின்றிருந்த பெரியவர் ஒருவர் முன்னால் வந்...

"மொதல்ல பார்த்தது நான்தாங்க. ஒண்ணுக்குப் போறதுக்... இந்தப் பள்ளத்துக்குப் பக்கத்துல வந்தப்ப, பையன் உள்ளார விழு... கிடந்தது தெரிஞ்சுதுங்க... உடனே பக்கத்துல இருக்கிற நடுவட்... போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் தகவல் குடுத்தேன்ங்க."

நஞ்சுண்டா மறுபடியும் அந்த எஸ்.ஐ.யிடம் திரும்பினார்...

"பையனை எந்த ஆஸ்பத்திரிக்கு கொண்டு போ... இருக்கீங்க...?"

"நடுவட்டம் அரசாங்க ஆஸ்பத்திரிக்குத்தான் சார்..."

"மிஸ்டர் அரி ...! நீங்களும், உங்க மனைவியும் ஜீப்பு... புறப்பட்டு, ஆஸ்பத்திரிக்கு போய் வருணைப் பாருங்க. நா... எஸ்.ஐ.கிட்டே பேசிட்டு 'பைக்'ல வந்துடறேன். பயப்படா... போங்க... பையனுக்குத்தான் எந்த ஆபத்தும் இல்லையே...!"

அரியும், ஜெயாவும் தலைகளை ஆட்டிவிட்டு– ஜீப்பி... ஏறிக் கொண்டு பயணப்பட, நஞ்சுண்டா திரும்பி எஸ்.ஐ.வை... ஏறிட்டார்.

"பையன் எப்படி பள்ளத்துல விழுந்தான்னு விசாரணை... பண்ணுனீங்களா...?"

"அதைத்தான் இங்கே இருக்கிறவங்ககிட்டே கேட்டு... பார்த்துட்டிருக்கேன் சார்."

"ஏதாவது தகவல் கிடைச்சுதா...?"

"யாருக்கும் எதுவும் தெரியலை சார். ஆனா, பையனை...



...பள்ளத்தில் இருந்து மீட்டு, ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறதுக்காக ...ஜீப்புல ஏத்தும்போது ஒரு பேரைச் சொல்லி முனகினான் ...சார்..."

"பேரா... என்ன பேர்...?"

"துர்கா..."

## 12

முதலிரவு அறைக்குள் கட்டிலின் எல்லா திசைகளிலும் மல்லிகைப் பூக்ககள் சரம்சரமாய்த் தொங்கி மூச்சை அடைக்கிற மாதிரி மணத்தது.

வெளியே பெய்துகொண்டிருந்த பனியின் ஜில்லிப்பு கண்ணாடிக் கதவுகளின் இடுக்குகளையும் ஊடுருவி வந்திருக்க– அறைக்குள் இருந்த தணல் அடுப்பின் இதமான வெப்பம் குளிரை விரட்டி அடித்துக்கொண்டிருந்தது.

கட்டிலில் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு பக்கம் பக்கமாய் துர்காவும், வல்லபும் உட்கார்ந்திருந்தார்கள்.

துர்கா புன்னகை மிளிர சொன்னாள்.

"சரியா பதினேழு மணி நேரமாச்சு..."

"எதுக்கு?"

"நீங்கள் என் கழுத்துல தாலியைக் கட்டி."

கழுத்தில் தங்க குண்டுகளோடு கனமாய் தொங்கிய மஞ்சள் மின்னும் தாலியை எடுத்துக் காட்டினாள்.

"திரில்லா இருக்கு. நேத்து வரைக்கும் நீயும், நானும் காதலர்கள் இன்னிக்கு அங்கீகரிக்கப்பட்ட கணவன்– மனைவி. அம்மா அப்பா விளையாட்டு விளையாட நேரத்தையும், அறையையு... நமக்காக ஒதுக்கிக் கொடுத்திருக்காங்க... நம்ம பெரியவங்க..."

"எனக்குக் கடைசி நிமிஷம் வரைக்கும் நம்ம கல்யாண... நடக்குமாங்கிற சந்தேகம் இருந்தது."

"எப்படியோ கல்யாணம் முடிந்தது..."- சொல்லிக்கொ
துர்காவை கட்டி அணைத்தான் வல்லப்.

துர்கா அவனிடம் இருந்து தன்னை மெல்ல விடு
கொண்டபடி சொன்னாள்.

"என்னங்க...! நான் ஒண்ணு சொல்லுவேன்.
கேட்கணும்."

"என்ன சொல்லப் போறே?"

துர்கா தலையைக் குனிந்துகொண்டு மெல்லிய கு
சொன்னாள்.

"நான் ஒரு வேண்டுதல் நேர்ந்துகிட்டேன்."

"வேண்டுதலா... என்ன வேண்டுதல்?"

"இன்னியில் இருந்து ஒரு மண்டலத்துக்கு அதா
நாற்பத்தெட்டு நாட்களுக்கு நாம கொஞ்சம் சுத்தபத்
இருக்கணும்."

"சுத்தபத்தமா...! அப்படீன்னா...?"

"ஒரு நாற்பத்தெட்டு நாளைக்கு நாம விலகி இருந்து, ஒவ்வொ
சோம வாரமும் விரதம் கடைபிடிச்சி..."

"கடைபிடிச்சி...?"

"நாற்பத்தெட்டு நாள் முடிஞ்சதும் தமிழ்நாட்டுல இருக்
முக்கியமான கோயில்களுக்குப் போயிட்டு வரப் போறோம்."

"இதெல்லாம் எதுக்காக...?"

"உங்க ஜாதகத்துல இருக்கிற களத்திர தோஷம் நிவர்த்தி
வேண்டாமா...?"

"போச்சுடா...! கடைசியில நீயும் பயந்துட்டே பார்த்தியா
ஜாதகம், ஜோசியம் இதிலெல்லாம் நம்பிக்கை இல்லேன்னு
சொன்னே...?"

"இப்பக்கூட நம்பிக்கை இல்லைதான். இருந்தாலும் ஒரு மன
திருப்திக்காக இந்த வேண்டுதலை நிறைவேத்தி வைப்போமே!"

வல்லப் போலியாய் மயக்கம் வருவது போல் பாவ
காட்டினான்.



"நாற்பத்தெட்டு நாளா? அம்மாடி! உன்னைப் பக்கத்துல வெச்சு பார்த்துகிட்டு என்னால சும்மா இருக்க முடியாது. இதயம் ஒரு மாதிரி ஆயிடும்..."

"பிளீஸ்... நாற்பத்தெட்டு நாளுங்கிறது நாற்பத்தெட்டு நொடி மாதிரி போயிடும்."

"இது தேவையா துர்கா?"

"தேவைதான்...! எனக்காக நீங்க கொஞ்சம் மனக் கட்டுப்பாடோடு இருக்கணும்..."

"என்னால இருக்க முடியும்னு தோணலை. காதலிச்ச நாட்கள்ல கூட ஒரு முத்தம் கிடையாது. ஒரு தொடுதல் கிடையாது. 'ஜென்டில்மேன்' காதல். இப்போ தாலி கட்டின பிறகும் கையைக் கட்டிப் போட்டா, நான் என்ன பண்ண முடியும்! ஒரு சின்ன வீடு இருந்தாலாவது பரவாயில்லை..."

துர்கா பக்கத்தில் இருந்த தலையணையைத் தூக்கி ஒரு மொத்து மொத்தினாள்.

"போங்க! நீங்க பேசினது எனக்குப் பிடிக்கலை."

"ஸாரி..."

"ஸாரி சொன்னா ஒத்துக்கமாட்டேன். தோப்புக்கரணம் போடுங்க..."

"எவ்வளவு...?"

"நூறு..."

"அய்யோ... தாங்கமாட்டேன்..."

"சரி... அம்பது..."

"இன்னும் குறை..."

"இருபது..."

"பத்து போடறேனே!"

"சரி... போடுங்க."

"வல்லப் வேட்டியை இறுகக் கட்டிக்கொண்டு கட்டிலில் இருந்து எழுந்தான்.

முகம் மாறியது.

"என்னமோ தெரியலை. தலை லேசா சுத்தற மாதிரி ... கேட்டான்.
– சொல்லும்போதே ஒரு பக்கமாய்ச் சரிந்து விழுந்தா...
தூர்கா பதறிக்கொண்டு எழுந்தாள்.

"அய்யய்யோ... என்னங்க உங்களுக்கு?"

வல்லபை தாங்கிப் பிடித்தாள்.

"து...ர்...க்...கா..."

நெஞ்சைப் இறுக பற்றிக்கொண்டு– முகம் வியர்த்து... வலியால் துடித்தான் வல்லப்.

## 13

நடுவட்டம் ஆரம்ப சுகாதார மையத்துக்குச் சொந்த... அந்த ஆஸ்பத்திரியில் பாதுகாப்பான ஒரு அறைக்குள் வருண... படுக்க வைத்திருந்தார்கள்.

நெற்றியில் இருந்த லேசான காயத்திற்கு 'பிளாஸ்... போட்டிருந்தார்கள்.

டாக்டர் ஒருவர் அரி, ஜெயாவிடம் சொல்லிக்கொ... இருந்தார்.

"உயிருக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை. ஆனா... ஒரு அதிர்ச்சிக்கு வருண் ஆளாகி இருக்கான். அது என்ன... தெரியலை. இங்கே ஆஸ்பத்திரிக்கு வந்தபோதே அவனுக்கு ... சுயநினைவு இருந்தது. பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன். ... தெளிவா வரலை.

பயந்த மாதிரி பார்த்தான். அவன் இயல்புக்கு வரணும்... நல்லா தூங்கி எழுந்திரிக்கணும். ஆக, தூங்கறதுக்காக ஒரு ... போட்டிருக்கேன். எப்படியும் ஆறு மணி நேரம் தூங்குவா... அதுக்கப்புறம்தான் அவனுக்கு ஞாபகம் வரும். ...



புத்துணர்ச்சியா இருக்கும்."

ஜெயா அழுகையோடு கேட்டான்.

"டாக்டர்! வருண் ஒரு பெரிய பள்ளத்துக்குள்ளே விழுந்திருக்கான். உடம்புல எந்த இடத்திலும் 'பிராக்சர்' இல்லையே...?"

"உடம்பைப் பொறுத்தவரைக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஹி ஈஸ் ஆல் ரைட். ஆனா, மனநிலை தொந்தரவுப்பட்டு இருக்கு. அது என்னன்னு கண்டுபிடிக்கணும்..."

டாக்டர் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டாவும், கிறிஸ்டோபரும் அறைக்குள் நுழைந்தார்கள்.

நஞ்சுண்டா, டாக்டரிடம் வருணின் உடல்நிலையைப் பற்றி விசாரித்துவிட்டு அரியிடம் திரும்பினார்.

"மிஸ்டர் அரி ...! துர்கா என்கிற பேர்ல உங்களுக்குத் தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களா?"

"துர்கா?"

"எஸ்..."

"அப்படி யாரும் தெரிஞ்சவங்க இல்லையே? எதுக்காகக் கேட்கறீங்க இன்ஸ்பெக்டர்?"

"வருண் அந்தப் பேரைச் சொல்லி முனகி இருக்கான்... நடுவட்டம் சப்–இன்ஸ்பெக்டர் மோகன் அதை கேட்டிருக்கார்."

"ஆச்சர்யமா இருக்கே...! வருண் எதுக்காக துர்காங்கிற பேரைச் சொல்லணும்...? அந்தப் பேர்ல அவனுக்கும் சரி... எங்களுக்கும் சரி... யாரையுமே தெரியாதே?"

ஜெயா குறுக்கிட்டு சொன்னாள்.

"துர்காங்கிறது கடவுளோட பேர். வருண் பயத்துல இருந்ததினால அந்தப் பேரைச் சொல்லி இருக்கலாம்..."

"எனக்கு அப்படி தோணலை மிஸஸ் ஜெயா. வருண் காணாமே போனதுக்கும், அந்தத் துர்காவுக்கும் ஏதோ ஒரு வகையில் சம்பந்தம் இருக்கு."

ஜெயா பயத்தோடு அரியைப் பார்த்தான்.

...ம் இந்த ஊட்டிக்கு வந்த நேரமே ...போலிருக்கு. வருண் கண் முழிச்சதும் ஊருக்கு கிளம்பிடலாம்...”

தந்தகண்டா இடைமறித்தார்.

“அப்படி நீங்க கிளம்பிட முடியாதும்மா. வருண் ஒரு வேளை கடத்தப்பட்டிருந்தா, அது யாருன்னு நீங்க தெரிஞ்சுக்க வேண்டாமா?”

அரி ஆமோதித்தான்.

“இன்ஸ்பெக்டர்... யூ ஆர் கரெக்ட். வரணுக்கு என்ன நேர்ந்ததுன்னு தெரிஞ்சுகிட்டே நாங்க சென்னைக்கு கிளம்பறோம்...”

## 14

**வ**ல்லபை பரிசோதித்துப் பார்த்த டாக்டர் கவலை பார்வையோடு சுற்றிலும் நின்றிருந்த உமாபதி, துர்கா, தயா, சுதாகர்– நான்கு பேரையும் பார்த்துவிட்டு கம்மிய குரலில் சொன்னார்.

“வல்லப் இறந்துட்டார். கடும் மாரடைப்பு...”

துர்கா இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டு பலமாய் வீறிட்டாள்.

“இல்ல டாக்டர்... அவர் இறந்திருக்க மாட்டார். நல்லா ‘டெஸ்ட்’ பண்ணிப் பாருங்க.”

அவளுடைய குடும்ப மருத்துவரான அவர்– கனமாய் பெருமூச்சொன்றை விட்டபடி சொன்னார்.

“இனிமே ‘டெஸ்ட்’ பண்ணிப் பார்க்க ஒண்ணுமே இல்லை துர்கா. உனக்கு இப்படியொரு நிலைமை நேர்ந்து இருக்கக் கூடாது. இந்த உண்மையை நீ ஜீரணிச்சித்தான் ஆகணும். வல்லப் உயிரோடு இல்லை. திடீர்னு வந்த ஒரு கடுமையான மாரடைப்பு



அவரோட உயிரை பறிக்கக் காரணமா இருந்திருக்கு.”

துர்கா வெறி பிடித்தவள் போல் கூச்சலிட்டாள்.

“டாக்டர்! இது மாரடைப்பு கிடையாது. இயற்கையான மரணம் கிடையாது.”

டாக்டர் திகைத்தார்.

“நீ என்னம்மா சொல்றே...?”

“டாக்டர்! என்னோட கணவர் வல்லப் கொலை செய்யப்பட்டிருக்கார். அந்தக் கொலைக்குக் காரணமானவங்க இந்த வீட்டுக்குள்ளேயே இருக்காங்க...”

“என்னது... கொலையா? கொலையாளி இந்த வீட்டுக்குள்ளேயே இருக்காங்களா?”

“ஆமா டாக்டர்...”

“நீ யாரைம்மா சொல்றே?”

“இதோ இவங்கதான்...”

தயாவையும், சுதாகரையும் சுட்டிக் காட்டினாள் துர்கா.

உமாபதி வெகுண்டார்.

“துர்கா... உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? உன்னோட தாய்மாமனும், சித்தப்பாவும் எதுக்காக மாப்பிள்ளையைக் கொலை செய்யணும்!”

“காரணமெல்லாம் எனக்குத் தெரியாது. அவங்கதான் கொலை பண்ணி இருக்காங்க. மொதல்ல போலீசுக்கு போன் பண்ணுங்க... போலீஸ் வந்தா எல்லா உண்மையும் வெளியே வந்துடும்.”

“துர்கா! புத்திகெட்டத்தனமா பேசாதே.”

உமாபதி சொன்னதை பொருட்படுத்தாமல் துர்கா டெலிபோனை நோக்கிப் போனாள்.

ரிஸீவரை எடுத்துக்கொண்டு டயலில் போலீசுக்குரிய எண்களைத் தட்டினாள்.

மறுமுனையில் ‘ரிங்’ போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

“போலீஸ் ஸ்டேஷனா...?”

"ஆமா..."

"சார்...! நான் எஸ்டேட் அதிபர் உமாபதியோட மகள் பேசறேன். இங்கே வீட்ல ஒரு கொலை. என்னோட கணவ கொன்னுட்டாங்க... உடனே புறப்பட்டு வாங்க..."

துர்கா பேசி ரிஸீவரை வைத்துவிட்டு- அப்படி தளர்ந்து உட்கார்ந்து முழங்கால்களைக் கட்டிக்கொண்டு ஆரம்பித்தாள்.

## 15

இரவு பதினொரு மணி.

நடுவட்டம் ஆஸ்பத்திரி.

வருண் கண்விழித்து மெல்ல எழுந்து உட்கார- பக்கவா நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த அரி, ஜெயா, கிறிஸ்டோ ஆர்வ முகங்களோடு எழுந்து அவனைச் சூழ்ந்தார்கள்.

ஜெயா அவனுடைய முகத்தை வருடிவிட்டாள்.

"டேய்... வருண்...! ஏன்டா இப்படியெல்லாம் நடந்துக்கிற உனக்கு என்னடா ஆச்சு...?"

ஜெயாவுக்கு எந்தப் பதிலும் சொல்லாமல் கட்டிலைவிட்டு கீழே இறங்கினான் வருண்.

"வருண்! எங்கேடா போறே?"

ஜெயாவின் கையை உதறிவிட்டு வேகமாய் அறையைக் கடந்து வெளியே வந்தான்.

பின்னாலேயே மூன்று பேரும் ஓடிவந்தார்கள்.

"வருண்..."

பக்கத்து அறையில் தங்கி இருந்த இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா அரவம் கேட்டு வேகவேகமாய் வெளியே வந்தார்.

"என்ன?"

"வருண் தூங்கி எந்திரிச்சதும் யார் பேச்சையும் கேட்கா



டுவிடுன்னு வெளியே போறான்."

நஞ்சுண்டா ஓடிப் போய் வருணின் தோள் பட்டையைப் பற்ற- அவன் உதறிவிட்டு நேர் பார்வை பார்த்துக்கொண்டு நடந்தான்.

நஞ்சுண்டா வியப்புக்குப் போனார்.

"ஒரு சின்னப் பையனுக்கு இவ்வளவு பலமா...?"

அரி பாய்ந்து போய் வருணைத் தடுக்க முயல-

நஞ்சுண்டா அவனைக் கையமர்த்தினார்.

"மிஸ்டர் அரி ...! அவனைத் தொந்தரவு பண்ணாதீங்க. அவனை அவன் போக்கில் போகவிடுங்க. அவன் எங்கேதான் போறான்னு பார்த்துடலாம்."

"இன்ஸ்பெக்டர் சொல்றதும் சரிதான். அவனைப் பின்தொடர்வோம்..."

கிறிஸ்டோபர் சொல்ல- எல்லோரும் வருணை சத்தம் காட்டாமல் பின் தொடர்ந்தார்கள்.

பனி பெய்துகொண்டிருந்த அந்த நடுநிசி வேளையில்- ஆஸ்பத்திரிக்கு வெளியே வந்து குறுகிய ரோட்டுப் பாதையில்- அவசரமாய் செலுத்தப்பட்ட அம்பைப் போல் நடக்க ஆரம்பித்தான் வருண்.

இவர்கள் தொடர்ந்தார்கள்.

பனிக்காற்று 'விசுக் விசுக்'கென்று முகத்தில் அறைந்துவிட்டுப் போனது.

வருண் நடந்தான்.

சில நிமிட நடைக்குப் பின் மரங்கள் மண்டிய ஒரு இறக்கத்திற்குள் இறங்கினான்.

முன்னால் போய்க்கொண்டிருந்த அரி- ரோட்டின் பக்கவாட்டில் கைகாட்டிய போர்டைப் பார்த்து உள்ளுக்குள் அதிர்ந்தான்.

"இந்துக்களின் மயானத்துக்கு போகும் வழி!"

"இன்ஸ்பெக்டர்..."

"ம்..."

"வருண் மயானம் இருக்கிற பக்கம் நடக்கிறானே!"

"அதான் எனக்கும் ஆச்சர்யமா இருக்கு. இந்த ராத்[திரி] நேரத்துல இங்கே ஏன் இவன் வரணும்?"

"இன்ஸ்பெக்டர்...! எனக்கு பயமா இருக்கு. வருணை தடுத்து நிறுத்தி, திரும்பவும் ஆஸ்பத்திரிக்கே கூட்டிட்டு போயிடலாமா...?"

"ஏன் பயப்படுறீங்க அரி? என்ன நடக்குதுன்னு பார்த்துடலாம்."

வருண் இப்போது வேகமாய் நடந்துகொண்டிருந்தான்.

பாதை போகப் போக குறுகி- ஒற்றையடி பாதையாய் மாறி- இரண்டு பக்கமும் நெருக்கமாய் மரங்களை வைத்திருந்தது. தம்புராவில் சுருதி கூட்டிய மாதிரி சில்வண்டுகளின் சத்தம்.

அரை கிலோ மீட்டர் தூரம் நடந்ததுமே-

நட்சத்திரங்களின் மங்கிய வெளிச்சத்தில் கல்லறைகளோடு ஒரு மயானம் விரிந்தது.

ஜெயா அந்தக் குளிரிலும் வியர்த்து வழிந்து போய்- அரியின் கைகளைக் கெட்டியாய் பற்றிக்கொண்டாள்.

"என்னங்க இது... வருண் சுடுகாட்டுக்கெல்லாம் வந்திருக்கான்...?"

"பொறு...! என்னதான் நடக்குதுன்னு பார்த்துடலாம்..."

வருண் இப்போது கல்லறைகளுக்கு நடுவில் நடந்து- ஒவ்வொரு கல்லறையாய்க் குனிந்து பார்த்துக்கொண்டு போய்- ஒரு ஊசியிலை மரத்துக்குக் கீழே சதுரமாய் பதிக்கப்பட்டிருந்த கல்லறைக்கு முன்பாய் போய் நின்றான்.

இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா அரியையும், ஜெயாவையும் கையமர்த்திவிட்டு- தான் மட்டும் மெதுவாய் பூனை நடை நடந்து போய் வருணுக்கு பின் பக்கமாய் நின்றார்.

வருண் அந்தக் கல்லறைக்கு முன்பாய் ஆணி அடித்த மாதிரி நிற்க- நஞ்சுண்டா தலையை உயர்த்திக் கல்லறையின் முகப்பில்



பதிக்கப்பட்டிருந்த சலவைக் கல்லைப் பார்த்தார்.

சிவப்புப் பெயிண்டில் எழுத்துகள் பளிச்சென்று தெரிந்தன.

**வயது 27**

**மலர்ந்த நாள்: 4-7-1962**

**உதிர்ந்த நாள்: 8-12-1989**

நஞ்சுண்டா இன்னமும் பக்கத்தில் போய் நின்று வருணின் தோளைத் தொட்டார்.

"வருண்."

வருண் மெதுவாக தலையைத் திருப்பி- நஞ்சுண்டாவை வெறித்த மாதிரி பார்த்தான்.

உதடுகள் மெதுவாய் அசைந்தன.

"என்னோட பேர் வருண் கிடையாது."

"பின்னே...?"

"வல்லப்."

எல்லோரும் திகைத்த மாதிரி பார்த்தார்கள்.

## 16

இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா கூடலூர் போகும் ரோட்டில் பைக்கை விரட்டி- 'டீ கார்டன்ஸ்' என்ற பெயர்ப் பலகை பார்வைக்குக் கிடைத்ததும் வண்டியை நிறுத்தினார்.

'போர்டு' அம்புக்குறி போட்டுக் காட்டிய பக்கம் பார்த்தார்.

தேயிலைத் தோட்டங்களுக்கு மத்தியில் ஒரு ஆறடி அகல மண் ரோடு கோணல் மாணலாய் வளைந்து போயிற்று.

'பைக்'கை அதற்குள் நுழைத்து- ஆக்ஸிலேட்டரை முறுக்க, 'பைக்' குதித்துக் குதித்து ஓடியது.

எல்லா திசைகளிலும் பச்சைப் பசேல் தேயிலைச் செடிகள். 'பைக்' ஒரு அரை கிலோ மீட்டர் தூரம் பயணித்ததும், எஸ்டேட்





பங்களா விஸ்தாரமாய் பரவித் தெரிந்தது.

பங்களாவை நெருங்க- பிரமாண்டமான காம்பவுண்டு கேட் பார்வைக்குக் கிடைத்தது. அதன் பக்கத்திலேயே கூண்டு. உள்ளே ஓய்வு பெற்ற ராணுவ வீரர் தோற்றத்தில் மீசை முறுக்கிய ஒரு காவலாளி.

இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் கூண்டை விட்டு பவ்வியமாய் வெளியே வந்து வணக்கம் தெரிவித்தான்.

நஞ்சுண்டா கேட்டார்.

"எஸ்டேட் அதிபர் உமாபதி இருக்காரா?"

"இருக்கார் சார்..."

"பார்க்கணுமே..."

"ஒரு நிமிஷம் இருங்க சார். கேட்டுச் சொல்றேன்."

காவலாளி மர கூண்டுக்குள் போய்- அங்கிருந்த இண்டர்காமில் பேசிவிட்டு, கேட்டை அகலமாய்த் திறந்து வைத்தான்.

"உள்ளே போங்க சார். போர்டிகோ வராந்தாவிலேயே முதலாளி உட்கார்ந்திருப்பார்."

'பைக்'கை உள்ளே விரட்டினார் நஞ்சுண்டா.

பங்களா இப்போது முழுமையாய் பார்வைக்குக் கிடைத்தது. தோட்டம் சீராய் பராமரிக்கப்பட்டு இருக்க, அதையொட்டிப் போன கான்கிரீட் பாதையில் 'பைக்'கை நிதான வேகத்தில் விரட்டி- இரண்டு வெளிநாட்டு கார்கள் நின்று கொண்டிருந்த போர்டிகோவுக்கு வந்து சேர்ந்தார்.

போர்டிகோ வராந்தாவில் செம்மர சாய்வு நாற்காலி ஒன்றில் தனியாய் உட்கார்ந்து புத்தகம் படித்துக்கொண்டு இருந்த உமாபதி- படியேறி வந்த நஞ்சுண்டாவைப் பார்த்து-

"வாங்க" என்று சொல்லி- எதிரில் இருந்த பிரம்பு நாற்காலியைக் காட்டினார்.

நஞ்சுண்டா உட்கார்ந்து தன்னை அறிமுகப்படுத்தியதும் உமாபதி கேட்டார்.

"என்ன விஷயம்...?"

...ஆரம்பித்தார். "ஒன்பது வருஷத்து...
...எட்டாம் தேதி வல்லப்ன்னு யாராவது...
இறந்து போனாங்களா...?"
"ஆமா... வல்லப் என்னோட மாப்பிள்ளை."
"உங்க மாப்பிள்ளையா...? எப்படி இறந்தாருன்னு...
முடியுமா?"
உமாபதி, நஞ்சுண்டாவை குழப்பமாய் பார்த்தார்.
"இன்ஸ்பெக்டர்! சம்பவம் நடந்து இத்தனை வருஷம்...
ஆயிருச்சு. இப்போ எதுக்காக இந்தப் புது விசாரணை...
"சார்... பிளீஸ்! மொதல்ல நீங்க என்னோட கேள்விக்கு...
சொல்லிவிட்டு வாங்க. அதுக்கப்புறம் நான் இங்கே...
வந்தேங்கிறதை– இந்த விசாரணைக்கு என்ன அவசியம்...
சொல்றேன்."

உமாபதி சில விநாடிகள் நஞ்சுண்டாவையே பார்த்துக்கொண்டு...
இருந்துவிட்டு பின் மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.

"என் மகள் துர்காவோட கணவர் வல்லப். கல்யாண...
அன்னிக்கு ராத்திரியே மாரடைப்பு வந்து இறந்து போனா...
இயற்கையான மரணம் இல்லை, கொலைதான்னு என்னோட...
போலீஸ்ல புகார் கொடுத்துட்டா. போலீஸ் வந்தது. பிணத்...
கைப்பற்றி உடனே அரசாங்க ஆஸ்பத்திரிக்கு கொண்டு...
பிரேதப் பரிசோதனை பண்ணிப் பார்த்தாங்க."

"அதுக்கப்புறம்..."

"நான் சொல்றேன் இன்ஸ்பெக்டர்..." பின்பக்கம் ஒரு பெ...
குரல் கேட்க, நஞ்சுண்டா திரும்பினார்.

குளிர்ச்சிக்கு இதமாய் சால்வையை போர்த்திக்கொ...
நின்றிருந்த அந்த முப்பது வயதுப் பெண், நஞ்சண்டா...
நெருங்கினாள்.

"இன்ஸ்பெக்டர்! நான் துர்கா. ஒன்பது வருஷங்களு...



பிறகு இந்த எஸ்டேட் பங்களாவுக்குள்ளே மறுபடியும் போலீஸ் வந்திருக்கு. நீங்க எதுக்காக வந்து இருக்கீங்கன்னு தெரியாது. இருந்தாலும் உங்கக் கேள்விக்கு நான் பதில் சொல்றேன்."

"தாங்க்யூ மிஸஸ் துர்கா..."

துர்கா தொடர்ந்தாள்.

"என்னோட கணவர் வல்லப்போட உடல் பரிசோதனை பண்ணப்பட்டு, உடனடியாய் அறிக்கை கைக்கு வந்தது. 'ரிசல்ட்' என்ன தெரியுமா இன்ஸ்பெக்டர்? என்னோட கணவர் இறந்தது மாரடைப்பில் அல்ல– விஷம் தடவிய சிகரெட்டைப் புகைத்ததால்..."

"அப்படியா...?"

"ஆமா...."

"யார் அந்தக் காரியத்தைப் பண்ணினது...?"

"என்னோட சித்தப்பா தயாவும், என் தாய் மாமன் சுதாகரும்..."

"என்ன காரணம்...?"

"நான் வல்லப்பை காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டது அவங்களுக்குப் பிடிக்கலை. கல்யாணத்தை நிறுத்த எப்படி எப்படி எல்லாமோ முயற்சி பண்ணினாங்க. வல்லப்போட ஜாதகத்துல தோஷம் இருக்குன்னு சொல்லி, அவர் கல்யாணம் பண்ணிகிட்டா கொஞ்சநாள்தான் உயிரோடு இருப்பாருன்னு சொல்லி பயமுறுத்தினாங்க.

நான் அவங்க சொன்னதை எல்லாம் காதுல போட்டுக்காம பிடிவாதமா இருந்து கல்யாணத்தைப் பண்ணிட்டேன். அது அவங்களுக்குப் பொறுக்கலை. சிகரெட் பழக்கம் உள்ள என் கணவருக்கு விஷம் தோய்ந்த சிகரெட்டைப் புகைக்கக் கொடுத்து அதன் காரணமா மாரடைப்பை வரவழைச்சிக் கொன்னுட்டாங்க. போலீஸ் விசாரணை நடத்தி அவங்க ரெண்டு பேரோட அறைகளை சோதனை பண்ணும்போது கட்டில் மெத்தைக்கு கீழே மறைச்சு வெச்சிருந்த மெல்ல கொல்லும் விஷம் போலீ...

"ஒரு சின்ன விசாரணை..."

"கேளுங்க..."

நஞ்சுண்டா ஆரம்பித்தார். "ஒன்பது வருஷத்துக்கு முந்தி ஒரு டிசம்பர் எட்டாம் தேதி வல்லப்ன்னு யாராவது உங்க வீட்ல இறந்து போனாங்களா...?"

"ஆமா... வல்லப் என்னோட மாப்பிள்ளை."

"உங்க மாப்பிள்ளையா...? எப்படி இறந்தாருன்னு சொல்ல முடியுமா?"

உமாபதி, நஞ்சுண்டாவை குழப்பமாய் பார்த்தார்.

"இன்ஸ்பெக்டர்! சம்பவம் நடந்து இத்தனை வருஷங்கள் ஆயிருச்சு. இப்போ எதுக்காக இந்தப் புது விசாரணை...?"

"சார்... பிளீஸ்! மொதல்ல நீங்க என்னோட கேள்விக்கு பதிலை சொல்லிவிட்டு வாங்க. அதுக்கப்புறம் நான் இங்கே எதுக்காக வந்தேங்கிறதை– இந்த விசாரணைக்கு என்ன அவசியங்கிறதை சொல்றேன்."

உமாபதி சில விநாடிகள் நஞ்சுண்டாவையே பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு பின் மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.

"என் மகள் துர்காவோட கணவர் வல்லப். கல்யாணமான அன்னிக்கு ராத்திரியே மாரடைப்பு வந்து இறந்து போனார். அது இயற்கையான மரணம் இல்லை, கொலைதான்னு என்னோட மகள் போலீஸ்ல புகார் கொடுத்துட்டா. போலீஸ் வந்தது. பிணத்தைக் கைப்பற்றி உடனே அரசாங்க ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் பிரேதப் பரிசோதனை பண்ணிப் பார்த்தாங்க."

"அதுக்கப்புறம்..."

"நான் சொல்றேன் இன்ஸ்பெக்டர்..." பின்பக்கம் ஒரு பெண் குரல் கேட்க, நஞ்சுண்டா திரும்பினார்.

குளிர்ச்சிக்கு இதமாய் சால்வையை போர்த்திக்கொண்டு நின்றிருந்த அந்த முப்பது வயதுப் பெண், நஞ்சுண்டாவை நெருங்கினாள்.

"இன்ஸ்பெக்டர்! நான் துர்கா. ஒன்பது வருஷங்களுக்குப்



பிறகு இந்த எஸ்டேட் பங்களாவுக்குள்ளே மறுபடியும் போலீஸ் வந்திருக்கு. நீங்க எதுக்காக வந்து இருக்கீங்கன்னு தெரியாது. இருந்தாலும் உங்கக் கேள்விக்கு நான் பதில் சொல்றேன்."

"தாங்க்யூ மிஸஸ் துர்கா..."

துர்கா தொடர்ந்தாள்.

"என்னோட கணவர் வல்லப்போட உடல் பரிசோதனை பண்ணப்பட்டு, உடனடியாய் அறிக்கை கைக்கு வந்தது. 'ரிசல்ட்' என்ன தெரியுமா இன்ஸ்பெக்டர்? என்னோட கணவர் இறந்தது மாரடைப்பில் அல்ல– விஷம் தடவிய சிகரெட்டைப் புகைத்ததால்..."

"அப்படியா...?"

"ஆமா...."

"யார் அந்தக் காரியத்தைப் பண்ணினது...?"

"என்னோட சித்தப்பா தயாவும், என் தாய் மாமன் சுதாகரும்..."

"என்ன காரணம்...?"

"நான் வல்லப்பை காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டது அவங்களுக்குப் பிடிக்கலை. கல்யாணத்தை நிறுத்த எப்படி எப்படி எல்லாமோ முயற்சி பண்ணினாங்க. வல்லப்போட ஜாதகத்துல தோஷம் இருக்குன்னு சொல்லி, அவர் கல்யாணம் பண்ணிகிட்டா கொஞ்சநாள்தான் உயிரோடு இருப்பாருன்னு சொல்லி பயமுறுத்தினாங்க.

நான் அவங்க சொன்னதை எல்லாம் காதுல போட்டுக்காம பிடிவாதமா இருந்து கல்யாணத்தைப் பண்ணிட்டேன். அது அவங்களுக்குப் பொறுக்கலை. சிகரெட் பழக்கம் உள்ள என் கணவருக்கு விஷம் தோய்ந்த சிகரெட்டைப் புகைக்கக் கொடுத்து, அதன் காரணமா மாரடைப்பை வரவழைச்சிக் கொன்னுட்டாங்க. போலீஸ் விசாரணை நடத்தி அவங்க ரெண்டு பேரோட அறைகளை சோதனை பண்ணும்போது கட்டில் மெத்தைக்குக் கீழே மறைச்சு வெச்சிருந்த மெல்ல கொல்லும் விஷம் போலீ

[illegible] கிடைச்சதால வசமா மாட்டிக்கிட்டாங்க..."

நஞ்சுண்டா ஆறுக்கிட்டு கேட்டார்.

"இப்ப அந்த ரெண்டு பேரும் எங்கே இருக்காங்க... ஜெயிலிலா...?"

துர்கா மேலே கையைக் காட்டினாள்.

"ரெண்டு பேரும் மேலே போய் சேர்ந்துட்டாங்க. செஷன்ஸ் கோர்ட்டுல தீர்ப்பு தூக்குத் தண்டனை. ஐகோர்ட்டுக்கு அப்பீல் போனாங்க. நடக்கலை. தூக்குல தொங்கியே ஆகணும்னு சொல்லிட்டாங்க. ஜனாதிபதிக்கு கருணை மனு போட்டாங்க. தள்ளுபடி ஆகிட்டு. 1994 ஆம் வருஷம் நவம்பர் மாசம், ரெண்டு பேரையும் ஒரு நாள் விட்டு ஒருநாள் தூக்குல போட்டாங்க."

நஞ்சுண்டா சில விநாடிகள் யோசனையில் இருந்துவிட்டு நிமிர்ந்தார்.

"மேடம்... வல்லபை இழந்த நீங்க வேற கல்யாணம் பண்ணிக்கலையா....?

துர்கா வெறுமையாய் புன்னகைத்தாள்.

"சாரி! வல்லப் எனக்குக் கட்டிய தாலியை இதுவரைக்கும் நான் கழற்றவே இல்லை. வெளி உலகத்துக்கு வேணும்னா நான் ஒரு விதவையா இருக்கலாம். ஆனா... மனசளவில் நான் இன்னமும் திருமதி துர்கா வல்லப்தான். இந்த எஸ்டேட் வேலைகளையும் பார்த்துட்டு, அவரோடு நான் மானசிகமாக குடும்பம் நடத்திட்டு வர்றேன்.

நானும், அவரும் காதலர்களா இருந்தபோது பேசிக்கிட்டதை 'டேப்' பண்ணியும் வெச்சிருக்கேன். ராத்திரி நேரங்களில் அவரோட ஞாபகம் அதிகமாய் இருக்கும்போது அதைப் போட்டுக் கேட்பேன். என்னை மறுகல்யாணம் பண்ணிக்கச் சொல்லி அப்பா கேட்டுக் கேட்டுக் களைச்சு போயிட்டார். என்னை பொறுத்தவரைக்கும் இந்த மானசிக வாழ்க்கையே சந்தோஷமா இருக்கு..."

"ஓ.கே மேடம்...! நான் இப்போ இங்கே எதுக்காக வந்தேங்கிறதை சொல்லிடறேன்..."



"உங்களுக்கு சென்னையில ஜெயா–அரின்னு யாரையாவது தெரியுமா...?"

"ஜெயா–அரியா...?"

"ஆமா..."

"இந்தப் பேர்கள்ல எனக்கு யாரையும் தெரியாதே! ஏன்... அவங்களுக்கு என்ன?"

"மேடம்...! இறந்து போன வல்லப் மேல இவ்வளவு பிரியம் வெச்சு மானசிகமா அவரோடு குடும்பம் நடத்திட்டு வர்ற உங்களுக்கு நான் இப்போ சொல்லப் போகிற ஒரு தகவல் அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கும்."

துர்கா ஆர்வமானாள்.

"என்ன தகவல்... சொல்லுங்க..."

"அந்த ஜெயாவுக்கு ஒரு தம்பி. பேர் வருண். வயசு எட்டு. அவன் இதுவரைக்கும் ஊட்டிக்கு வந்ததே இல்லை. இப்ப வந்திருக்கிறதுதான் முதல் தடவை. ஊட்டிக்கு வந்து ரெண்டு நாள்ல அவனோட நடவடிக்கைகள் எல்லாமே அடியோடு மாறிடுச்சு. திடீர்னு காணாமே போனான். பிறகு கிடைச்சான்.

தலையில் லேசான அடிப்பட்டிருந்த அவனை நடுவட்டம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் 'அட்மிட்' பண்ணினோம். நேத்து அர்த்த ராத்திரியில ஆஸ்பத்திரியில படுத்திருந்தவன் திடீர்னு எந்திரிச்சு வெளியே போனான். எங்கேதான் போறாங்கிறதை தெரிஞ்சுக்கிறதுக்காக நாங்களும் அவனை 'பாலோ' பண்ணினோம். அவன் போன இடம் எது தெரியுமா மேடம்?"

"எது...?"

"நடுவட்டம் பகுதியில் இருக்கிற கல்லறைத் தோட்டம். அங்கே உங்க கணவர் புதைக்கப்பட்ட சமாதிக்கு முன்னாடி போய் வெறிச்சுப் பார்த்தபடி நின்னுட்டான். நான் அவனோட தோளைத் தட்டி– 'வருண்'னு கூப்பிட்டேன். அதுக்கு அவன், 'என்னோட பேர் வருண் கிடையாது. வல்லப்'ன்னு சொல்றான்..."

…?"

அது மட்டுமில்லை மேடம். உங்க பேரையும் அடிக்கடி சொல்றான். 'என்னை துர்காகிட்ட கூட்டிட்டுப் போங்க. நான் துர்காவைப் பார்க்கணும்'னு சொல்றான்..."

"உண்மையாவா...?"

"ஆமா மேடம்... அந்த எட்டு வயசுப் பையன் பேசற பேச்சைப் பார்த்தா ஒரே பிரமிப்பா இருக்கு. ஓட்டல்ல வேலை பார்க்கிற 'பேரர்' கதிர்வேலு, ஒன்பது வருஷத்துக்கு முன்னாடி உங்க பங்களாவில் சமையல்காரராய் இருந்தாராமே?"

"ஆமா..."

"நேத்து மத்தியானம் வருண் அந்த ஓட்டலுக்கு ஜெயா–அரியோடு சாப்பிடப் போனபோது கதிர்வேலுவைப் பார்த்து, 'உன்னோட பேர் கதிர்வேலுதானே?'ன்னு கேட்டிருக்கான்..."

துர்கா இரண்டு கைகளையும் மார்புக்கு குறுக்காகக் கட்டிக் கொண்டு, "அடக்கடவுளே" என்றாள். "ரொம்ப வியப்பா இருக்கு... இன்ஸ்பெக்டர் சார். நான் அந்த வருணைப் பார்க்கணுமே...?"

"இன்னைக்கு சாயந்தரம் இங்கே கூட்டிட்டு வரட்டுமா...?"

"ப்ளீஸ்..."

## 17

சாயந்திரம் நான்கு மணி.

ஓட்டல் அறையில் ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி வெளியே வெறித்து பார்த்தான் வருண்.

ஜெயா அழுத கண்களோடு இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டவை ஏறிட்டாள்.

"ஸார்...! என்னோட தம்பி வருணை நாங்க சென்னைக்கே கூட்டிட்டுப் போயிடுறோம். இப்போ துர்காகிட்ட கூட்டிட்டுப் போய் ஏதாவது பிரச்சினை ஆகிட்டா?"



"ஒரு பிரச்சினையும் வராது. வருணைப் பார்க்க துர்கா ரொம்பவும் ஆவலா இருக்காங்க..."

அரி குறுக்கிட்டான்.

"இன்ஸ்பெக்டர்...! இந்த 'கம்ப்யூட்டர்' யுகத்துல இதை என்னால நம்ப முடியலை. ஒன்பது வருஷத்துக்கு முந்தி இறந்து போன வல்லப்தான் இப்போதைய வருண் என்கிற விஷயம் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதா இருக்கு. இப்போ அந்தத் துர்காகிட்டே கூட்டிட்டுப் போனா, திரும்பவும் அவன் எங்களுக்குப் பழைய வருண் மாதிரி கிடைப்பானா...?"

"மிஸ்டர் அரி...! வருண் இப்போ இருக்கிற நிலைமையில் நீங்க அவனை சென்னைக்குக் கூட்டிட்டு போறதும் ஆபத்து. மனநிலைக்கு பாதிப்பு ஏற்பட நிறைய வாய்ப்பு இருக்கு. அவனோட வழியிலேயே விட்டுத்தான் நம்ம வழிக்குக் கொண்டு வரணும்..."

ஜெயா இடைமறித்தாள்.

"இன்ஸ்பெக்டர் சொல்றதும் ஒரு வகையில் சரியாத்தான் இருக்கு. துர்காகிட்ட வருணைக் கூட்டிட்டுப் போவோம். அங்கே அவன் எப்படி நடந்துக்கறாங்கிறதைப் பார்த்துட்டு அதுக்கப்புறமா ஒரு மனநல நிபுணரைப் போய்ப் பார்ப்போம்."

"சரி... கிளம்புவோமா?"– சொன்ன இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா, ஜன்னல் பக்கமாய் திரும்பி நின்றுகொண்டிருந்த வருணைக் கூப்பிட்டார்.

"வருண்..."

அவன் திரும்பவில்லை.

"வ...ரு...ண்..."

பதில் இல்லை.

ஜெயா கூப்பிட்டாள்.

"வல்லப்..."

வருண் மெதுவாக உடம்பைத் திருப்பினான்.

"வா... இப்படி..."

வந்தான்

"துர்காகிட்ட போலாமா?"

வருணின் கண்களில் மகிழ்ச்சி மின்னியது.

'போலாம்' என்பதற்கு அடையாளமாய் வருண் தலை அசைத்தான்.

நஞ்சுண்டா கேட்டார்.

"துர்கா வீடு எங்கேன்னு உனக்குத் தெரியுமா...?"

"தெரியும்..."

"கார்ல போகும்போது நீதான் வழி காட்டணும்..."

"எனக்கு வழி தெரியும்..." சொல்லிக்கொண்டே முன்னால் நடக்க ஆரம்பித்துவிட்டான் வருண்.

போர்டிகோவிலேயே காத்திருந்தாள் துர்கா.

உடம்பு ஒரு கம்பமாய் மாறி இருக்க- அதில் இதயம் மாட்டிக்கொண்டு ஒரு கொடி மாதிரி பறந்தது.

"எட்டு வயசுப் பையன் தன்னை வல்லப்பாக நினைத்து என் பெயரைச் சொல்லிக்கொண்டு இருக்கிறானா?"

ஆச்சர்யம்தான்...!

ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டு பத்திரிகை ஒன்றைப் புரட்டியபடி இருந்த உமாபதி மெல்லக் குரல் கொடுத்தார்.

"அம்மா துர்கா..."

"என்னப்பா?"

"மாப்பிள்ளை வல்லப் இறந்து போய் ஒன்பது வருஷமாச்சு. வரப்போற பையனுக்கு வயது எட்டு. மாப்பிள்ளைதான் அந்த பையனா பொறந்து வந்திருப்பாருன்னு நினைக்கிறேன்."

"மறு ஜென்மம்ன்னு ஒண்ணு உண்டாப்பா?"

"கண்டிப்பா உண்டும்மா... நிறைவேறாத ஆசைகளோடு இந்த ஜென்மத்தில் இறந்து போறவங்க, அடுத்த ஜென்மத்திலும் அதே ஞாபகங்களோடு பிறக்கிறது சர்வ நிச்சயமான உண்மை. வெளிநாட்டுக்காரங்கள்ல எழுபது சதவீதம் பேர் மறுஜென்மம்ன்னு ஒண்ணு இருக்கிறதை நம்புறாங்க. இந்த ரகசியம் பற்றி பெரிய



அளவுல ஆராய்ச்சிகளும் நடந்துகிட்டு இருக்கு..."

உமாபதி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே 'காம்பவுண்டு கேட்'டுக்குள் அந்த கார் நுழைவது தெரிந்தது.

"அப்பா...! அவங்க வந்துட்டாங்கன்னு நினைக்கிறேன்..."

உமாபதி எழுந்து நின்றார்.

போர்டிகோவுக்குள் வந்து சொருகிக்கொண்ட மாதிரி கார் நின்றது.

துர்கா ஆர்வமாய்ப் பார்க்க...

காரில் இருந்து முதல் ஆளாய் இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா இறங்க- அவரைத் தொடர்ந்து ஜெயா, அரி- மறுபக்கம் கதவைத் திறந்துகொண்டு கால் பதித்தார்கள்.

கடைசியாய் வருண்.

மருண்ட பார்வையோடு சுற்றும் முற்றும் பார்த்தபடி இறங்கினான்.

போர்டிகோ படிகளின் உச்சியில் நின்றிருந்த துர்காவைப் பார்த்ததும்-கண்களில் பரவசம் பாய- உதடுகள் மெல்ல அசைந்தன.

"து...ர்...கா."

இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த ஜெயாவையும், அரியையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

துர்கா அவர்களுக்கு வணக்கம் சொல்லிக்கொண்டே வருண் மேல் பார்வையைப் போட்டாள்.

வருண் அவளையே இன்னமும் புன்னகையோடு பார்த்துக்கொண்டு இருந்தான்.

துர்கா போர்டிகோ படிகள் இறங்கி, வருணுக்குப் பக்கத்தில் வந்து நின்றாள்.

அவன் புன்னகை பெரியதானது.

"துர்கா..."

"ம்..."

"எப்படி இருக்கே...? நான் யாருன்னு உனக்குத்

தெரியுதா...?"

"தெரியலையே..."

வருண் பெரிய மனுஷன் போல் மார்புக்குக் குறுக்காகக்
கைகளைக் கட்டிக்கொண்டு சிரித்தான்.

"நான்தான்... உன்னோட வல்லப்..."

"அப்படியா...?"

"என்ன அப்படியான்னு கேட்கறே! என்னை நீ மறந்துட்டே
போலிருக்கு..."

துர்கா பிரமிப்பும்,குழப்பமுமாய் வருணையே பார்த்துக்கொண்டு
இருக்க- இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா அவள் காதோரம் வந்து
மெல்லிய குரலில் சொன்னார்.

"மேடம்...! கார்ல வரும்போது உங்க எஸ்டேட் பங்களாவுக்கு
வழி சொன்னதே வருண்தான்! 'காம்பவுண்டு கேட்'டுல இருக்கிற
வாட்ச்மேனைப் பார்த்ததும், 'என்ன போஜன்... சவுக்கியமா?'ன்னு
கேட்டான். வாட்ச்மேன் அசந்து போயிட்டான். நீங்க வருண்கிட்ட
பேசும்போது வல்லப் மாதிரியே அவனை நினைச்சுட்டுப் பேசுங்க...
அப்பத்தான் அவன் குழப்பம் இல்லாமே பேசுவான்."

சரியென்று தலையாட்டிய துர்கா, வருணிடம் குனிந்து
கேட்டாள்.

"வாங்க... வல்லப்! உள்ளே போலாம்."

துர்காவைப் பின் தொடர்ந்து நடந்த வல்லப், உமாபதியைப்
பார்த்ததும் மலர்ந்தான்.

"மாமா..."

பக்கத்தில் போய் அவருடைய கைகளைப் பற்றிக்கொண்டு
கேட்டான்.

"உங்களுக்கு அடிக்கடி நெஞ்சுவலி வருமே! இப்ப
பரவாயில்லையா மாமா...?"

உமாபதி நெகிழ்ந்து போய் வருணின் கன்னத்தை மெல்ல
தட்டிக் கொடுத்தார்.

"உடம்புல இந்த உசிரை வெச்சுகிட்டு இன்னும் நல்லாத்தான்



இருக்கேன்..."

"முன்னைக்குப் பார்த்ததைவிட இளைச்சு போயிட்டீங்க...!
துர்கா, நீ உன்னோட அப்பாவை சரியாவே கவனிச்சுக்கிறதில்லை
போலிருக்கே..." சொல்லிக்கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தவன்-
துர்காவை ஏறிட்டான்.

"அந்தப் புல்தரைக்கு நடுவுல ஒரு குளம் இருந்ததே...?"

"அதை மூடிட்டோம்."

"ஏன்...?"

"தோட்டக்காரன் குழந்தை ஒண்ணு அந்தக் குளத்துக்குள்ளே
தவறி விழுந்து இறந்து போச்சு. குளத்தைப் பார்க்கும்
போதெல்லாம் அந்தக் குழந்தையோட ஞாபகம் வந்தது. அதான்
மூடிட்டோம்..."

வருண், பங்களாவுக்குள் நுழைந்தான்.

எல்லோரும் பின் தொடர்ந்தார்கள்.

ஹாலைச் சுற்றிப் பார்த்த வருண்- மாடிப் படிகளுக்குப்
பக்கத்தில் போய் நின்றுகொண்டு "துர்கா" என்றான்.

"என்னங்க...?"

"வீட்டோட அமைப்பு மாறி இருக்கே...?"

"ரெண்டு வருஷத்துக்கு முந்திதான் மாற்றம்
பண்ணினோம்..."

மாடிப் படிகளில் ஏறினான் வருண்.

கைகளைப் பின்னுக்குக் கட்டிக்கொண்டு- இன்னும் பெரிய
மனுஷத் தோரணையில் எல்லாப் பக்கமும் பார்த்தபடி- மாடியில்
உள்ள ஒவ்வொரு அறையாய் கவனித்து- அந்த அறையில் உள்ள
மாற்றங்களைப் பற்றி சொல்லிக்கொண்டே வந்தான்.

எல்லாமே துல்லியம்.

வருண் சொல்லச் சொல்ல- துர்காவுக்கு வியப்பில் நெஞ்சை
அடைத்தது.

வராந்தாவில் நடந்து அந்தக் கடைசி அறைக்கு முன்பாய்
வந்து நின்ற வருண்- லேசாய் முகம் மாறினான்.

அறையின் கதவில் பெரிய பூட்டு.

கேட்டான்.

"ஏன் இந்த அறை பூட்டி இருக்கு...?"

துர்கா ஒரு பெருமூச்சோடு வருணைப் பார்த்தாள்.

"இது எந்த அறைன்னு உங்களுக்கு ஞாபகம் வரலையா?"

வருண் பத்து விநாடி யோசிப்புக்குப் பின் புன்னகைத்தான்.

"புரியுது. நாம் வாழ்க்கையை ஆரம்பிக்கிறதுக்காக கல்யாணமான முதல் நாள் ராத்திரி இந்த அறைக்குள்ளே நுழைஞ்சோம். ஆனா, நான் மட்டும் வெறும் உடலா வெளியே வந்தேன்."

துர்காவின் கண்களில் நீர் துளிர்த்து பளபளத்தது.

வருண் சொன்னான்.

"நான் இந்த அறையைப் பார்க்கணும்."

இன்ஸ்பெக்டரிடம் உமாபதி சொன்னார்.

"அந்த அறையைப் பூட்டி வெச்சு ஒன்பது வருஷமாச்சு. உள்ளே ஒரே தூசியும் தும்புமா இருக்கும்."

நஞ்சுண்டா கிசுகிசுத்தார்.

"பரவாயில்லை... திறங்க. பார்க்கட்டும். இதையெல்லாம் பார்க்க வெச்ச பின்னாடிதான் அவனை ஒரு மனநல நிபுணர்கிட்டே கூட்டிட்டுப் போக முடியும். வல்லபைப் பத்தின பழைய நினைவுகளை எல்லாம் அழிச்சு– வருணை வருணாக மாத்த முடியும்..."

உமாபதி கொஞ்சம் தள்ளி நின்றிருந்த வேலைக்காரனைப் பார்த்து கையசைக்க– அவன் ஓடிப் போய் ஒரு சாவிக் கொத்தோடு வந்தான்.

பூட்டுக்கு சாவியைக் கொடுத்து சிரமப்பட்டு நெம்ப– அது 'கிளிக்' என்ற பெரிய சத்தத்தோடு திறந்துகொண்டது.

வேலைக்காரன் கதவைத் தள்ளினான்.

எல்லோருடைய பார்வையும் உள்ளே போயிற்று.

ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் கட்டிலை அலங்கரித்த



ர்ச் சரங்கள் வாடி சருகாகி உலர்ந்து தொங்கிக்கொண்டிருக்க றையின் மூலைகளில் நூலாம்படையும், தூசியும் அடை டையாய் பரவி இருந்தன.

அறையில் விழுந்த வெளிச்சத்தின் காரணமாய்– உள்ளே ர்ந்துகொண்டிருந்த எலிகள் விருட் விருட்டென்று ஓடி றைந்தன.

வருணின் முகம் இப்போது வெகுவாய் மாறி இருந்தது. நெற்றிப் பரப்பில் லேசாய் வியர்வை.

அறையையே வெறித்து பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். நஞ்சுண்டா அவன் தோள் மேல் மெல்ல கையை வத்தார்.

"வல்லப்..."

"........."

"வல்லப்..."

"ம்..."

"அறைக்குள்ளே போகலையா?"

"வே... வேண்டாம்..."

"ஏன்?"

"ப...ப...பயமா இருக்கு..."

"என்ன பயம்? உள்ளே போ..."

"மாட்டேன்..."– சொல்லிக்கொண்டு இருக்கும்போதே ருணின் உடல் ஒரு வித நடுக்கத்துக்கு உட்பட்டது.

விழிகள் நிலைகுத்தி இடப்பக்கமாய், துவண்ட கீரைத் தண்டாய் ழே சரிந்தான்.

நஞ்சுண்டா தாங்கிப் பிடித்துக்கொண்டு அரியைப் பார்த்து ரல் கொடுத்தார்.

"அரி ! அந்த மனநல நிபுணர் அற்புதராஜுக்கு போன் பண்ணி டனே வரச் சொல்லுங்க..."

தொலைபேசியை நோக்கி ஓடினான் அரி.

# 18

மனநல நிபுணர் அற்புதராஜ் மயக்கமாய்க் கிடந்த வருணை சோதித்துப் பார்த்துவிட்டு- சுற்றி நின்றிருந்த எல்லோரையும் பொதுப்படையாய் பார்த்துக்கொண்டு சொன்னார்.

"பையன் மனநிலை ரொம்பவும் 'டிஸ்டர்ப்' ஆகி இருக்கு. இவனை உடனடியா ஒரு நல்ல மனநல ஆஸ்பத்திரியில 'அட்மிட்' பண்ணி சிகிச்சை எடுக்கறது ரொம்பவும் நல்லது. இதே நிலையில் இவனை விட்டால், மனநிலை வெகுவா பாதிக்கப்பட்டு பைத்தியமா மாறவும் சாத்தியம் இருக்கு..."

"டாக்டர்..."

ஜெயா கண்ணீரோடு கைகளைக் கூப்பினாள்.

"நீங்களே உடனடியா ஏதாவது சிகிச்சை கொடுக்க முடியாதா?"

இப்போதைக்கு இவனுக்கு மயக்கம் தெளிய ஊசி மட்டுமே போடலாம். ஆனா... மயக்கம் தெளிஞ்சா அவனுடைய செயல்பாடு எப்படி இருக்கும்னு சொல்ல முடியாது. ஊசி போடறதைவிட இவனை மயக்கத்திலேயே வெச்சிருந்து, சென்னைக்கு கொண்டு போய் ஆஸ்பத்திரியில சேர்த்து உடனடியா சிகிச்சைஆரம்பிச்சுடறது உத்தமம்."

துர்கா கவலை தோய்ந்த முகத்தோடு டாக்டரை ஏறிட்டாள்.

"டாக்டர்...! வருண் யாரோ ஒரு பையன் கிடையாது. ஒன்பது வருஷங்களுக்கு முன்னாடி இறந்து போன என்னோட கணவர். இப்போ பையன் உருவத்துல இருக்கார். வருண் இனிமேல் இங்கேதான் இருக்கணும். பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. இதே பங்களாவில் வெச்சு சிகிச்சை எடுத்து எனக்கு வல்லபா மாத்திக் கொடுங்க..."

ஜெயா வெகுண்டாள்.



"என்ன வார்த்தை சொன்னீங்க துர்கா? வருணை வல்லபா மாத்தித் தர்றதா...? அப்படின்னா வருணை நாங்க இழந்துடணும்னு சொல்ல வர்றீங்களா?"

"நான் அப்படி சொல்லலை."

"பின்னே நீங்க பேசினதுக்கு என்ன அர்த்தம்...?"- குரலை உயர்த்திக் கத்திய ஜெயா அரியிடம் திரும்பினாள்.

"என்னங்க... ஊட்டியைவிட்டு இந்த நிமிஷமே நாம கிளம்பி ஆகணும். வருணை சென்னையில ஒரு நல்ல டாக்டர்கிட்ட காட்டி சிகிச்சை எடுக்கலாம். இவங்களைப் பத்தி நாம கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. வருணை பிடிச்சுக்குங்க. நாம கிளம்பலாம்."

வருணை நோக்கி அரி போக- நஞ்சுண்டா இடைமறித்தார்.

"மிஸ்டர் அரி... வருண் இன்னும் இங்கே ரெண்டு நாள் இருக்கட்டும்... பார்த்துட்டு கிளம்பலாம்."

"வேண்டாம் இன்ஸ்பெக்டர்... வருணை இங்கே இருக்க வெச்சா எல்லாருக்கும் பிரச்சினைதான். நாங்க சென்னைக்குப் போயிட்டா ஒருவேளை வருணுக்கு வல்லப் நினைவுகள் வராமலே கூட இருக்கலாம்... நாங்க இன்னிக்கே கிளம்பறோம்..."

கட்டிலில் கிடந்த வருணை இரண்டு கைகளாலும் வாரிக் கொண்டான் அரி.

"அரி... பிளீஸ்..."

"ஸாரி..."

வருணைத் தூக்கிக்கொண்டு அரி நடக்க ஆரம்பித்துவிட- ஜெயா அழுத கண்களோடு பின் தொடர்ந்தாள்.

# 19

இரவு பதினொரு மணி.

துர்கா தன் காரை குந்தா போகும் பாதையில்

விரட்டிக்கொண்டிருந்தாள். கடுமையாய் வீசிய குளிர் காற்றிலும் முகம் எண்ணெய் தடவியது மாதிரி வியர்த்துப் போயிருந்தது.

இருபது கிலோ மீட்டர் தூரத்தை விழுங்கிய கார், மரங்கள் அடர்ந்த ஒரு வளைவில் திரும்பி முகப்பு விளக்குகளை அணைத்துக்கொண்டு நின்றது.

தலைக்கு 'ஸ்கார்ப்'பை இழுத்துக் கட்டிக்கொண்டு இறங்கினாள்.

இருட்டு எல்லாப் பக்கமும் விரவி இருந்தாலும், நட்சத்திர வெளிச்சம் அதைத் துடைத்து வைத்திருக்க– உருளைக்கிழங்கு செடிகள் மண்டிய தோட்டத்து வழியாக நடந்து– அந்த ஒட்டு வீட்டுக்கு முன்பாய் வந்து நின்றாள்.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் கதவைத் தட்டினாள்.

"டொக்... டொக்..."

உள்ளே நிசப்தம்.

மறுபடியும் தட்டினாள்.

"டொக்... டொக்..."

இப்போது இருமல் சத்தத்தோடு ஓர் ஆண் குரல் கேட்டது.

"யாரு...?"

துர்கா கதவு இடுக்கில் உதட்டை வைத்துக் குரல் கொடுத்தாள்.

"ஜோசியரே... நான்தான்...!"

அடுத்த பத்து விநாடிகளுக்குள்– இருமல் சத்தத்தோடு கதவு திறக்கப்பட்டது.

கதவைத் திறந்தவர் ஜோசியர் மாதையா.

கம்பளியைப் போர்த்தி இருந்தவர் குரல் நடுங்கக் கேட்டார்.

"அ... அம்மா துர்கா... நீயா? என்னம்மா இந்த நேரத்துல...? ஒரு வார்த்தை சொல்லி விட்டிருந்தா நானே வீட்டுக்கு வந்திருப்பேனே...?"



"ஒரு முக்கியமான விஷயமா வந்தேன். ஜோசியரே...! நம்ம வீட்ல வெச்சு அதைப் பேச முடியாது."

"என்ன விஷயம்... உள்ளே வாம்மா."

துர்கா உள்ளே போனாள்.

அவர் மட்டுமே தங்கி இருந்த சிறிய வீடு அது.

ஜோசியர் மாதையா ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டார்.

அவள் உட்கார்ந்ததும் கேட்டார்.

"என்ன விஷயம்... சொல்லும்மா?"

"மறு ஜென்மம், செத்துப் போனவங்க இன்னொரு பிறவி எடுத்துட்டு வர்றது இதெல்லாம் உண்மையா ஜோசியரே...?"

"இந்நேரத்துக்கு எதுக்காகம்மா இந்தக் கேள்வி...?"

"கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க ஜோசியரே...?"

"நீ என்னம்மா சொல்றே?"

"என்னால கொலை செய்யப்பட்ட வல்லப், மறுபடியும் பொறந்து வந்திருக்கார்..."

"என்னது... வல்லப் மறுபடியும் பொறந்து வந்திருக்கானா?"

"ஆமா ஜோசியரே! இந்த ஜென்மத்துல அவர் பேர் வருண். எட்டு வயசுப் பையன். பொறந்த இடம் சென்னை."

"நிஜமாவா...?"

"நானே அசந்து போயிட்டேன் ஜோசியரே! சாயந்தரம் அந்த வருண் நம்ம எஸ்டேட் பங்களாவுக்கு வந்திருந்தான். வாட்ச்மேனைப் பார்த்து, 'என்ன போஜன்... சவுக்கியமா?'ன்னு கேட்டிருக்கான. வல்லப் உயிரோடு இருந்தப்ப நம்ம பங்களா எப்படி இருந்ததோ... அதை அப்படியே சொல்றான். முதலிரவு நடந்த அறைக்கு வந்ததும் அதைத் திறக்கச் சொல்லிப் பார்த்துட்டு, அப்படியே மயக்கமாகிட்டான்."

ஜோசியர் மாதையா திகைப்பில் இருந்தார்.

"நீ சொல்றதெல்லாம் நம்பற மாதிரியே இல்லையேம்மா..."

"நம்பித்தான் ஆகணும் ஜோசியரே...! இப்ப நான் இங்கே

வந்தது எதுக்காகத் தெரியுமா...?"

"சொல்லும்மா..."

"இந்த ஜென்மத்துல வருணாக வந்திருக்கிற வல்லப்புக்கு அவனைக் கொலை செய்தது நான்தான் என்கிற உண்மை தெரிஞ்சிருக்குமா...? ஒருவேளை தெரிஞ்சிருந்தா அது வெளியே வராதபடிக்கு செய்ய என்ன வழின்னு கேட்டுத் தெரிஞ்சுக்கத்தான் வந்தேன்..."

ஜோசியர் பதில் சொல்லும் முன்– கதவருகே அந்தப் பெண் குரல் கேட்டது.

"அதுக்கு வழி நான் சொல்றேன் துர்கா."

துர்கா அதிர்ந்து போய் கதவுக்கு வெளியே பார்வையைக் கொண்டு போக– இன்னமும் பலமாய் அதிர்ந்தாள்.

அங்கே ஜெயா நின்றிருந்தாள்.

"நீ... நீயா...?"

ஜெயா புன்னகைத்தாள்.

"நானேதான் துர்கா...! நீ இதே ஜோசியரைப் பார்க்க எப்படியும் இந்த ராத்திரி நேரத்துல வருவேன்னு எனக்குத் தெரியும். அதான் ராத்திரி எட்டு மணியில் இருந்து இங்கே காத்திருக்கேன். என்னோட எதிர்பார்ப்பு வீண் போகலை. வந்து மாட்டிக்கிட்டே. உன்னோட வாக்குமூலத்துக்கு நன்றி.

என்ன அப்படிப் பார்க்கிறே? எந்த வாக்குமூலம்னு கேட்கறியா...? ஒன்பது வருஷத்துக்கு முந்தி வல்லப்பை நீ கொலை பண்ணினதாய் ஒத்துக்கிட்டாயே... அதுதான்!"

துர்கா கோபாவேசமாய் ஜெயாவை நோக்கிவர– ஜெயா சட்டென்று விலகி நின்றுகொண்டு– தன் இடுப்பைத் தொட்டு கைத்துப்பாக்கியை எடுத்து துர்காவை நோக்கி நீட்டினாள்.

"துர்கா! நீ நினைக்கிற மாதிரி நான் சாதாரண பெண் கிடையாது. சி.பி.சி.ஐ.டி.யில் சீருடை அணியாத போலீஸ் அதிகாரி. 1994–ல் தூக்கில் போடப்பட்ட உன்னோட சித்தப்பா தயாவும், தாய் மாமன் சுதாகரும் தாங்கள் தூக்கில் போடப்படுறதுக்கு முந்தி



உங்க கடைசி ஆசை என்னன்னு கேட்டபோது–

'வல்லப்பை நாங்க கொலை செய்யலை. சாட்சியமும், சட்டத்தோட பிடியும் எங்களைத் தூக்கு மேடைக்குக் கொண்டு வந்துடுச்சு. ஆனா, உண்மையான கொலையாளி அந்த எஸ்டேட் பங்களாவுக்குள்ளேதான் இருக்கணும். நாங்க தூக்கில் போடப்பட்ட பிறகாவது அந்த உண்மையான குற்றவாளி கண்டுபிடிக்கப்படணும். இதுதான் எங்களுடைய கடைசி ஆசை'ன்னு சொல்லி இருந்தாங்க.

போன வருஷத்துல ஒரு நாள் அவங்க சம்பந்தப்பட்ட கோப்பு ஒண்ணைப் படிச்சுப் பார்க்கும்போது அவங்க ஆசை எனக்கு ஒரு நெருடலாக பட்டது. என் கணவருக்குக் கூடத் தெரியாம நான் மட்டும் ஊட்டிக்கு வந்து சில நாள் தங்கி, உன்னைக் கண்காணிக்க ஆரம்பிச்சேன். யாருக்கும் சந்தேகம் வராதபடிக்கு உன்னைப் பத்தி விசாரிச்சு எல்லா விவரங்களையும் தெரிஞ்சுக்கிட்டேன்.

அதுக்கு அப்புறம்தான் உன்னைப் பிடிக்கிறதுக்காக ஒரு வியூகம் அமைச்சேன். என்னோட தம்பி வருணும், இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டாவும் அதுக்கு முக்கியமானவங்க. எட்டு வயது வருணுக்கு வல்லபா நடிக்கிறதுக்காக நிறைய பயிற்சி கொடுக்க வேண்டியது இருந்தது. ஆனா, நாங்க எதிர்பார்த்ததுக்கு மேலா நல்லா நடிச்சான்.

இப்படியொரு வியூகம் நடந்தது என்னோட கணவருக்கு தெரியாது. தெரியப்படுத்தாததற்குக் காரணம் அவருக்கு இயல்பா நடிக்கத் தெரியாது. அதுவுமில்லாம கொஞ்சம் பயந்த சுபாவம் வேற. இந்த மாதிரியான விபரீத வியூகமெல்லாம் வேண்டாம்னு சொல்லிடுவார். ஆக, அவருக்குத் தெரியாமலே இந்த வியூகத்தை ஊட்டியில் அரங்கேற்றம் பண்ணினோம். அதுக்குத் தகுந்த பலன் கிடைச்சாச்சு."

ஜெயா பேசி முடிக்க–

இருட்டின் இன்னொரு பகுதியில் இருந்து இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டா வெளிப்பட்டார்.

அவர் சொன்னார்.

"இனி எங்களுக்குத் தெரிய வேண்டியதெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான். நீ காதலிச்சி கல்யாணம் பண்ணிகிட்ட வல்லபை நீயே எதுக்காகக் கொலை பண்ணினே...? கொலையைப் பண்ணினது மட்டும் இல்லாமே உன்னோட தாய்மாமனையும், சித்தப்பாவையும் ஏன் போலீசில் மாட்டிவிட்டு தண்டனை வாங்கிக் கொடுத்தே?"

ஜெயா புன்னகைத்தாள்.

"துர்காவும் சரி... ஜோசியரும் சரி! ரெண்டு பேரும் இப்போதைக்கு வாய் அடைச்சுப் போய் இருக்காங்க. ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிட்டா அங்கே வெச்சு எல்லாத்தையும் சொல்லிடுவாங்கன்னு நினைக்கிறேன்... ஸ்டேஷனுக்குப் போகலாம் வர்றீங்களா...? அந்தப் பக்க இருட்டுல போலீஸ் ஜீப் காத்திட்டு இருக்கு..."

## 20

**போ**லீஸ் நிலைய 'லாக்கப்' அறை.

நள்ளிரவு பன்னிரண்டு மணி.

ஜோசியரை சுவரோர மூலையில் உட்கார வைத்துவிட்டு– துர்காவுக்கு ஒரு நாற்காலி கொடுத்து– அவள் உட்கார்ந்ததும் ஜெயா அவள் தோளைத் தொட்டாள்.

"ம்... சொல்லு! வல்லபை எதுக்காகக் கொலை பண்ணினே...?"

துர்கா சில விநாடிகள் கண்ணை மூடிக்கொண்டு இருந்துவிட்டுப் பிறகு தெளிவாய் பேச ஆரம்பித்தாள்.

"வல்லபை ஆரம்பத்துல நான் உயிருக்கு உயிரா நேசிச்சேன். அவனோட காதல் கிடைச்சதுக்காக ராத்திரி நேரங்கள்ல தூக்கம் வராமே சந்தோஷப்பட்டு இருக்கேன். ஆனா, ஒருநாள் அவனோட சுயரூபம் தெரிஞ்சுது. கேரளாவில் இருந்தும், தமிழ்நாட்டில் இருந்தும் வெடிகுண்டுகளைத் தயார் பண்ணி நாட்டில் இருக்கிற



சமூக விரோத சக்திகளுக்கு 'சப்ளை' பண்ணுற பாதகத் தொழில் செய்யறாங்க என்கிற உண்மை எனக்குத் தெரிஞ்சதும் அதிர்ச்சியா இருந்தது.

போலீசுக்குப் போய் புகார் கொடுத்து சட்டரீதியா அவனைத் தண்டிக்கிறதைக் காட்டிலும், அந்தத் தண்டனையை நாமே கொடுத்தா என்னான்னு எனக்குத் தோணிச்சு. அவனோட இறப்பில் நாளைக்கு யாருக்கும் எந்தச் சந்தேகமும் வந்து விடக்கூடாதே என்கிறதுக்காக ஜோசியர் மாதையாவைவிட்டு வல்லபோட ஜாகதத்துல களத்திர தோஷம் இருக்கிறதா சொல்லச் சொன்னேன். அவரும் சொன்னார். ஆனா... நான் வல்லபைக் கொலை செய்யறதுல ஜோசியருக்கு விருப்பமில்லை. வேண்டாம்னு சொல்லிப் பார்த்தார். நான் கேட்கலை.

அந்த வல்லப்பை சாரி... வல்ல பாவியை முதலிரவிலேயே முடிச்சேன். அவனுடைய பாக்கெட்ல இருந்த சிகரெட்டை எல்லாம் எடுத்து விஷம் தடவி வெச்சது நான்தான். அதுக்கப்புறம் அந்த விஷ பாட்டிலை என்னோட தாய்மாமன், சித்தப்பா அறைகள்ல வெச்சேன்..."

நஞ்சுண்டா கேட்டார்.

"வல்லப்போட கொலையில் அந்த ரெண்டு பேரையும் ஏன் மாட்டிவிட்டே...? ரெண்டு நிரபராதிகள் அநியாயமா தூக்குல தொங்கிட்டாங்களே?"

துர்கா வெறுமையாய்ப் புன்னகைத்தாள்.

"வல்லப் கொலையைப் பொறுத்தவரைக்கும் அவங்க நிரபராதிகள்தான். ஆனா, அதுக்கு முன்னாடி அவங்க ஒரு கொலையைப் பண்ணி இருக்காங்களே! அந்தக் கொலைக்காகத்தான் தூக்குல தொங்கி இருக்காங்க..."

"இன்னொரு கொலையா...?"

"ஆமா... கொலை செய்யப்பட்டது என்னோட அம்மா. பதினைஞ்சு வருஷங்களுக்கு முந்தி தொழில் விஷயமா அப்பா வெளியூர் போயிருந்தபோது என்னோட தாய்மாமாவும், சித்தப்பாவும் அம்மாவை மிரட்டிப் பணம் கேட்டிருக்காங்க.





பணம் தரமாட்டேன்னு சொன்னதுக்காக அம்மாவை மாடியில் இருந்து கீழே தள்ளி கொன்னுட்டாங்க.

போலீசுக்குப் பணம் கொடுத்து– கொலையை விபத்தா மாத்திட்டாங்க. அந்தக் கொலையை நேர்ல பார்த்த ஒரே சாட்சி ஜோசியர்தான். அவர் மூலமாத்தான் இந்த உண்மை தெரிஞ்சுது. ரெண்டு பேரையும் பழி தீர்க்க ஒரு நல்ல நேரத்தை எதிர் பார்த்துட்டிருந்தேன். வல்லப் விவகாரம் கிடைச்சுது. உபயோகப்படுத்திவிட்டேன்."

ஜெயா, துர்காவின் தோளில் கை வைத்தாள்.

"துர்கா! உன்னை. நேர்ல பார்க்கும்போது சாதுவாவும், அமைதியாகவும் தெரியறே. உனக்குள்ளே இப்படியொரு கொலை வெறியா...?"

"இது கொலை வெறியில்லை மிஸஸ் ஜெயா. நியாயமான என்னோட கோபம். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சரி... தப்பக் கூடாது. இது சட்டத்தோட வேதவாக்கு. அதை நீங்க சீருடை போட்டுக்கிட்டு பண்ணுறீங்க. நான் சேலை கட்டிக்கிட்டுச் செய்கிறேன். வித்தியாசம் அவ்வளவுதான்...!"

சொல்லிவிட்டு சிரிக்கும் துர்காவை... இன்னமும் அதிசயத்தோடு, அதிர்ச்சியோடு பார்க்கிறாள் ஜெயா.

**(முற்றும்)**

## மூன்று

செவ்வாய்க்கிழமையை கிரேக்கர்கள் 'திருதி' என்று அழைப்பார்கள். அதாவது, வாரத்தில் 3–ம் நாள் என்றும், அது துரதிருஷ்ட நாள் என்றும் கருதுகிறார்கள்.

சீனாவில் வீட்டுக் கதவில் 3 நாணயங்களை சிவப்பு ரிப்பனால் கட்டி முன்புறக் கதவில் உள்பக்கமாக தொங்கவிடுகிறார்கள். இப்படி செய்தால் அதிக பணம் வரும் என்று நம்பிக்கையாம்.

– எம்.சம்பத்குமார், புதுடெல்லி.